V6 M10·24 15 June 19

221, N28 KN
M33·6·24.
189182

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா மூன்று.

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா

உள் நாடு ரூ. 7 8 0

புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—

வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS

29 AUG 1933

MADRAS

Vol 6] 1933 ஜூன் மீ 15உ [No. 24

பொருளடக்கம்.

1. கலையங்கம் (Leader) 461

2. கம்பராமாயணம் (மாரீசன் வதைப்படலம்)
T. N. சேஷாசலம், B.A.B.L. 463

3. தமிழ்ப் பாடம்
நளவெண்பா-கலிநீங்குகாண்டம் 466

4. ஞான தீபம்
T. R. இராஜகோபால் 465

5. நம்மாழ்வார் வைபவம் (5-ம் பத்து, 3-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 469

6. யாப்பிலக்கணம் (வெண்செந்துறை, வெண்டுறை)
வித்துவான் M. V. வேணுகோபாலப்பிள்ளை 471

7. காற்று மழை (அங்கம் 2. களம் 1.)
Shakespeare's Tempest 472

8. கலித்தொகை (பாலைக்கலி, 11, 12)
T. A. கனகசபாபதி முதலியார் 474

9. வர்த்தமானம் 479

## கலாநிலயம்

189182

### நான் நானே

எழுவாயும் பயனிலையும் தானேயா யமையும்படி, "நான் நான்" என ஒரு சிறுவாக்கியம் சேர்த்து அதன் உண்மைப்பொருளைச் சிந்தனை செய்துசெய்து தெளிந்துகொள்ளப் பயில்பவர் உளராயின் அவர் வாழ்க்கையின் வருத்தங்களைக் கடப்பதற்கு உரியவோர் வழியைத் தொடர்பவர் ஆகின்றனர் என்னலாம். ஒவ்வொருவனும் தன்னையே எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருப்பதால் சுயநயப்பேயின் வாய்ப்பட்டு இப்பொழுது இவ்வுலகம் பெரிதும் வருந்துகின்றதென்னுஞ்சொல் எங்கும் வழங்கப்படுகின்றது. இது முற்றிலும் மெய்யன்று. ஒவ்வொருவனும் தன்னைப் பற்றியே நினைத்துக்கொண்டிருப்பதால் உலகங் கெடுகின்றது என்பது கருத்தாயின் அச்சொல் ஒருவாறு உண்மையாகலாம். மற்று, தன்னையே நினைத்துக்கொண்டிருப்பதால் உலகம் கெடுகின்றது என்று எவரேனும் கூறுவாராயின் அதனை உடனே மறுக்க வேண்டும். எல்லாரும் எங்கெங்குந் தனித்தனி தன்னையே போதிய அளவு நினையாமைதான், ஒருவன் தானே அடைகின்ற வருத்தத்திற்கும் அவனால் பிறர்படும் வருந்தத்திற்கும் காரணமாவதைச் சிறிது நுனித்து நோக்கினால் காணலாம்.

நான் நான். அமைக்கக்கூடிய வாக்கியங்களிலெல்லாம் மிக எளியது, மிக அழகியது இவ்வாக்கியம். (எல்லாருக்கும் விளங்கும்படி மிகஎளிய சொற்களால் சிறு சிறு வாக்கியங்களை பயிலவேண்டும் என்று வாதிப்பவர்களுக்கு இவ்வாக்கியம் நல்லதோர் பாடமாகும்). நான் நான், என்ற உணர்வில் ஒருவன் உறைவானாயின், அதனால் அல்லலில்லா வாழ்க்கையின் அமைதி உண்டாகும் என்றுகூறினேம். எனின், அவ்வுணர்வினைக் குறிக்கும் இவ்வாக்கியத்தின் பொருள் யாவது ஆகக்கூடும் ?

'நான் நான்,' எழுவாயும் பயனிலையுமுடையதோர் வாக்கியம் இது. நான்தான் எனக்குள்றியே ஒன்றை விட்டு ஒன்று பற்றி......" எனத் தாயுமானவர் பாட்டில் வந்திருப்பதுபோல் அகங்காரத்தின் வடிகுறியாய் அமைந்த அடுக்குத்தொடர் அன்று நம் வாக்கியம். தன்னைவிட்டு வேறுவேறு பிறவற்றைப் பற்றிக்கொள்கின்ற 'நான்' ஆகும் அது. ஆதலின், அவ் வடுக்குத் தொடரோடு மயங்காமல் நம் வாக்கியத்தை விலக்கிக் காட்டவோர் தேற்ற ஏகாரம் உதவலாம். எனின், 'நானே நான்' என்று நமது வாக்கியத்தைச் சிறிது மாற்றிக்கொள்வோம்; அல்லது 'நான் நானே' என்று கொள்ளினும் நம் கருத்திற்கு மாறாகாது.

பொதுவாகக் கூறமிடத்து, ஒருவன் தன்னினைவு கொள்ளுங்கால் தன்னைச் சார்ந்து பல நினைக்கின்றானேயன்றித் தன்னைமட்டுமே நினைப்பதில்லை. "நான் வறியன், நான் பெரியோன், நான் கடன் பட்டவன் அல்லது கடன் கொடுத்தவன், நான் மற்றவனைக் கெடுத்தவன் அல்லது மற்றவனால் கேடு அடைந்தவன், நான் தந்தை அல்லது மகன், நான் எசமானன் அல்லது ஏவலாளன், நான் நிந்தித்தவன் அல்லது நிந்திக்கப்பட்டவன், நான் முன்னுக்குவந்தவன் வாராதவன்," என்றெல்லாம் வேறாய எண்ணிறந்த பலவற்றைத் தன்மீது சார்த்திக்கொண்டு அவைகளின் நிலை

மையோடு தன்னைப் பிணித்துப் பிணித்து வீணாக வீழ்வதே மாந்தர் தொழில். இந்தச் சார்புஎண்ணங்களின்படி, 'நான்' என்னும் தனக்குப் பயனிலை ஆக வேறொன்றே நிற்கவேண்டியது இன்றியமையாததாகின்றது. அப்படி நிற்கின்ற வரையில் ஒருவனுக்குச் சுயேச்சையேனும் விடுதலை என்பதேனும் எங்கிருந்து வாய்க்கும். சார்ந்துவரின் அல்லது ஒருவனுக்குத் தன்னளவில் தானேயாய் நிற்கின்ற நிலையில்லையெனில் அரசிய லமைப்பும், சட்டதிட்டங்களும், பண்டைய பழக்கவழக்கங்களை உடைத்தெறியும் புது வீரமும், அவனுக்கு விடுதலையளிக்கும் உதவியை எங்ஙனம் புரிய இயலும்? முடவர்க்கு ஊன்றுகோல்போல, சிந்தனை சக்தியற்ற மனிதருக்குப் பிற பொருள்களைச் சாரவேண்டுமென்பது அவசிய மாகின்றது. அரசியல் அமைப்புக்களாலும் ஆசாரச் சீர்திருத்தங்களாலும்ஓர் நொண்டியைக் கோலில்லாமல் நடக்கவைத்து அவனுக்கு விடுதலை அளிக்கலாமென்று விளம்பத்தான் கூடுமோ!

இதனைவிடுத்து ஒருவன், "என்னின் பயன், நானாக இருத்தலே" என்பதைச் சிந்தித்து உணரவல்லவனாயின் அவனுக்குப் பிறிதொரு குறையில்லையே. ஒவ்வொருவனும், அவன் யாவனேயாயினும், தான் தானேயாக இருப்பதனினும் பெருமையும் சிறப்பும் அழகும் உவகையும் வேறு எதனில் இருக்கின்றன? ஒருவன் தன் பேரைக்கூட நினைக்காமல் "நான்நான், அதுபோதும்" என்னும்நினைவு அகலாமல் இவ்வுலகில் விவகரிப்பானாயின் உடனே அவனுக்கு வருத்தங்கள் வரக்கூடிய வழிகளெல்லாம் அடைபட்டுவிட்டன; உள்ளத்தில் ஊறும் உவகை போவதற்கும் இனி வழியில்லை. ஏனெனில், எவ்வழி வருத்தங்கள் நுழைகின்றனவோ அவ்வழியேதான் உவகையும் போகின்றது. ஆதலின், உவகையை நிலைக்கவைத்தால் வருத்தத்தையும் விலக்கியதாகும். சார்ந்து நினைப்பதெல்லாம் வருத்தத்தின் வாயில்கள், உவகையின் இருக்கையன்று. ஒருவன், தான் தானே யாவதை மதித்து அமைகின்ற தன்மையே சுயமதிப்பு (self-esteem) எனப்படும். இதனைத்தான் பலர் 'சுயமரியாதை' (self-respect) எனப்பிறழ்ந்து கருதுகின்றனர். ஒருவன், தன்னைத் தானேஎன நினைப்பதைவிட்டு, "நான் ஒரு பணக்காரன், அல்லது ஒரு உத்தியோக முடையவன், அல்லது மற்றொருவனை வென்றவன்" எனச் சார்ந்து மதித்து மகிழ்வானாயின், அது சுயமதிப் பாகாது. தன் கண்களை விற்றுக் கைக்கோல் வாங்கிய ஒரு குருடன், "என்னுடைய கோல் எத்துணை நீளம், பார்" என மகிழ்வதை ஒக்கும் அது.—சுயமரியாதை' என்பதிலெல்லாம் நூற்றிற்கு நூறுபாகமும் மரியாதையேயொழியச் சுயத்திற்கு ஒருபாகங்கூட இல்லாமை புலப்படும்.

இவ்வண்ணம் ஒருவன், தன்னைச் சார்ந்தும் சூழ்ந்தும் பூசியும் மூடியும் கிடக்கின்றவைகளைச் சற்றேனுங் கருதாமல் தானேயாகும் அத்தன்மையில் மனத்தை நிறுத்தப் பயில்வானாகி, "நான் நானே" என்னும் அவ்வாக்கியத்தினுள் அடங்குங்கால், அப்பொழுதுதான் பிரபஞ்சமடங்கலும் அவன் பெருகத் தலைப்படுகின்றான். அடக்கத்தின் பெருக்கமுடைய பாக்கியத்தது இச்சிந்தனை. ஏனெனில், "நான் நான்" என்னும் அச்சிந்தனை நிலைக்கநிலைக்க அவ்வாறே, வேறொன்றுடனும் சார்த்தாமல் பிறரையும், "நீ நீ", "அவன் அவன்", என்று எண்ணுகின்ற தன்மை தோன்றாமல் தீராதன்றே. இதுதான் எண்ணத்தின் சுத்தம், பிரபஞ்சத்தின் முதல் தோற்றம். 'நீ நீ' யாகவும் 'அவன் அவன்' ஆகவுமே தோன்றுங்கால் இகலென்பதற்கு இடம் சற்றேனும் இல்லாமற் போய்விடுகின்றது.

இவ்வகையாய பயிற்சியைத் தரவல்லன ஆன்றோர் இயற்றிய அருங் காவியங்களே. ஹோமர், ஷேக்ஸ்பியர், வான்மீகி, வியாசர், காளிதாசன், கம்பர், முதலிய பொய்யில் கேள்விப் புலமையினோர் புனைந்துரைத்திருக்கின்ற நூல்களிலும், இவர்கள்தம் புலமையில் தோய்ந்து தோய்ந்து முதிர்ந்த மனோபாவமுடைய உத்தம ஆசிரியர்களும் செய்தருளியிருக்கின்ற நூல்களுமே ஓத ஓத, "நான்நான்" 'நீ நீ' 'அவன் அவன்" எனத் தனக்குத்தானே பயனிலையாகின்ற உணர்வினை நம் உள்ளத்தில் எழுப்பித்தரும். இவ்வகை உணர்வினைப் பெற்றவர்களில் ஒருவராய கணியன் பூங்குன்றன், அதன் தன்மையையும் நிலைமையையும் விளம்பித்தருகின்ற புறநானூற்றுப் பாட்டொன்று இங்கு ஒப்புநோக்குதற் குரியது.

யாது மூரே யாவருங் கேளிர்
தீது நன்றும் பிறர்தர வாரா
நோதலுந் தணிதலு மவற்றோ ரன்ன
சாதலும் புதுவ தன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன் றுமிலமே முனிவின்
இன்னா தென்றலு மிலமே மின்னொடு
வானந் தண்டுளி தலைஇ யானாது
கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்
முறைவழிப் படூஉ மென்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தன மாகலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலு மிலமே
சிறியோரை யிகழ்த லதனினு மிலமே.

[எல்லாம் எனக்கு ஊர், எல்லாரும் எனக்கு உறவினர் தாம். நமக்குக் கேடேனும் நன்மையேனும் பிறரால் வருவதென்பதுஇல்லை. வருந்துவதும் அவ் வருத்தந் தீர்வதும் அவ்வாறே. சாவதோ புதிய செய்தி அன்று. வாழ்க்கையானது இனியதென்று நான் ஒருபோதும் மகிழ்ந்ததில்லை; அல்லது வெறுப்படைந்து வாழ்க்கை துன்பமுடையதென்று நினைப்பதுமில்லை. மின்னலுடன் மேகமானது குளிர்ந்த துளியைப் பெய்வதால் அடங்காமல் கல்களைமோதிக்கொண்டு ஒலிக்கின்ற வளப்பம்பொருந்திய பெரிய ஆற்றுநீரின் வழியே போகும் மிதவையைப்போல உயிர்கள் அவ்வவைகளுக்குரிய முறையின்வழியே செல்லுமென்பது மெய்க்காட்சித் திறமையுடைய நூல்களாலே உணர்ந்தேன். ஆதலின் மாண்புடைய பெரியோரைக் கண்டு நான் வியப்பதுமில்லை; சிறியோரை இகழ்தலென்பது அதனினும் இல்லை]

இக்கருத்திற்கிணங்க அமரிக்க நூலாசிரியர், ஜான் கூபர் பாய்ஸ்என்பவர் இயம்பிய சில வாக்கியங்களும் உண்மை வாய்ந்தன—

Of all the activities culture pursues in its effort to deepen our awareness of the multifarious magic of life, the one which ought most profoundly to influence us in the direction of humility is the reading of books. when one thinks what one owes to books, when one discovers again and again the extraordinary illuminations that have come to us from reading books, one's pride in one's own originality finds itself forced back to the honest, primordial ground where it has alone a right to expand and expatiate, the ground, namely, that we are what we are, different, peculiar, unique, but not superior to anyone.

மற்றவர்களைவிட நாம் உயர்ந்தவர்கள் அல்லர் என்ற எண்ணத்தின் மறுபுறமே, மற்றவர் நம்மில் தாழ்ந்தவர்கள் அல்லர் என்பது ஆகுமாதலின், கணியன் பூங்குன்றனும்,ஜான் கூபர் பாய்ஸ் என்பவரும், திறவோர் காட்சியால் தெளிந்த பொருள் ஒன்றேயாகின்றது.

விரைவில் நேராகும் என நம்பி, பத்திரிகை சிறிது தா[illegible]ங்கி நடந்து வருவதை நமது நண்பர்கள் பொறுத்துக்கொள்வார்கள் என்று நினைக்கின்றோம். "மானேஜர்"



THE REGISTRAR ... 29 AUG 1933 MADRAS

# கம்பராமாயணம்

## ஆரணிய காண்டம்—7. மாரீசன் வதைப் படலம்:

[452-வது பக்கத் தொடர்ச்சி]

நுண்ணிய வுண்மையை வெண்மையி னுவல்வார்

"இல்லாதன இல்லை, இளங்குமரா" என்று இராகவன் மெல்லென இசைத்த அச்சிறு வாசகத்தினகவயின் மிகப்பெரிய பொருளொன்று பொதிந்துளது. 'இல்லாதன இல்லை' என்னும் அவ்விரண்டு எதிர்மறைகளில் ஒன்றினின்று மற்றொன்றைக் கழித்து உடன்பாட்டு வாய்பாட்டில் உரைக்குங்கால் அது, "இருப்பனவெல்லாம் இருக்கின்றன" என்று முடியும். இருவகையினும் இவ்வாக்கியம் வெளிப்படையான வொன்றையே விளம்புகின்றதாதலின், மெய்ம்மையின் நுண்மை (Truth) என்பதற்குரியதாகாமல், உண்மையின் வெண்மை (Truism) என்னற்கே இயன்றதுபோல் தோன்றுகின்றது. 'இல்லாதன இல்லை' என்பதை இயம்ப வோர் இராகவன் வேண்டுமோ! வேண்டும்; சற்றே உற்று நோக்கினால், இராமனும் வேண்டும், அவனை இயக்கித்தரும் மெய்யுணர்வுடைய புலவர்பெருமான் கம்பரும் வேண்டும் என்னுந் தன்மை இனிதின் புலப்படும். இந்நுண்மை புலப்படுவதற்கு, நுனித்துணரும் ஊக்கமே உதவுமன்றி அதிகம் ஒன்றும் அறையவேண்டா.

'உளது' என்பதேபோல் 'இலது' என்பதும் ஒரு பொருளிற்கு உரியவோர் நிலைமையேயன்றி வேறன்று. எனின்,'உளது' என்பதற்கு இலக்காக ஒரு பொருள் இருக்கவேண்டுமென்பது இன்றியமையாததுபோலவே, 'இலது' என்பதற்கும் இலக்காகிய ஒருபொருள் இருத்தல் வேண்டும். ஆதலின், இல்லாத ஒரு பொருளை 'உளது' என்று எவ்வாறு இயம்புவதற்கியலாதோ, அவ்வாறே, இல்லாத ஒரு பொருளை'இலது' என்றும் இயம்புதற் கியலாதென்பதைச் சிறிது முயன்றால் உணர்ந்துகொள்ளலாம். யாதானும் ஒன்று இல்லை என்று நாம் சொல்லுங்கால், "அது, இன்ன இடத்தில், இன்ன காலத்தில், இன்ன சேர்க்கையில் இல்லை" என்று மற்றொன்றோடு சார்த்தி மறுக்கின்றோமே யொழிய, அப்பொருள் அதன் அளவிலேயே இல்லையென்று மறுப்பது நம் வாசகத்தின் கருத்தன்று. முற்றிலும் இல்லை என்று மூலத்தோடு ஒரு பொருளை மறுத்துரைக்க முயன்றுபார்த்தால் அப்பொழுது இத்தத்துவத்தின் அருமை தெரியவரும். இல்லாததொன்றைச் சொல்ல இயலாது. ஆதலான் நாம், இல்லையென்று சொல்கின்றவொரு பொருளும் இருக்கக்கூடியதே ஆதல் வேண்டும். இருக்கக்கூடியதெல்லாம் இருக்கத்தகுந்தவைகளே; இருக்கத்தகுந்தவைகள் எல்லாம் இருக்கின்றவைகளே. இருக்கக்கூடியதைத்தான் மறுக்கக்கூடும், ஆதலால், மறுக்கக்கூடியவைகளெல்லாம் இருக்கின்றவைகளே-என்னும் முடிவை நாம் அரிதின் எய்துவதற்கு இயன்றதாகின்றது. ஆதலின், இல்லாதன இல்லை என்னுமிது தத்துவ உணர்வின்கண் திரண்டுவரும் ஓர் உயரிய உண்மையின்பாற் படும். இம்முடிவு, தத்துவங் கடந்த பொருளாகிய அக்கடவுளின் உண்மையைக் காட்டும் நுண்மை யுடையதெனின், 'இல்லாதன இல்லை' என்னுமித் திப்பிய வாசகத்தின் பெருமையைச் செப்பவும் வேண்டுமோ! இவ்வரிய விடயம் பின்னும் நனி விளங்கும்பொருட்டு, முன் (1931ஷ, செப்டம்பர்மீ 17உ இதழில்) 'மறுப்பதும் உறுதியாமே' என்னும் தலைப்பின்கீழ் வரைந்துள தலையங்கக் கட்டுரையின் சில வாக்கியங்களை இங்குப் பெயர்த்தெழுதித்தருவது பயன்படும்:—

"விண்டவர் கண்டிலர் கண்டவர் விண்டிலர், என்னுமிவ் வழக்குக் கடவுள்திறத்தில் நிரந்தரமான செய்தியாவது சரதம். ஆதலின் அவனது உண்மையை விண்டுரைக்க யாம் இங்குப் புகுந்திலம். ஆயினும் அக்கடவுள் இருக்க இயலாது என்னும் எதிர்மறைச் சொல்லைச் சிறிது ஆராய்ச்சியால் வறியதாக்கிக் காட்ட இயலும். இல்லையேபோல் இருந்து, நம்மனத்தால் எட்டமாட்டாத் தனிநிலையுடைமையே அக்கடவுளின் பெருமைக்கு உரியதோர் அகச்சான்றாகும். கணித நூலால் குறிக்கவல்ல பேரெண் எதுவென்று கேட்கின்றார் ஓர் வித்தகர். எவ்விடை உரைப்போம். பதினாயிரங் கோடியேகோடி யென்றாலும் அதன் மேலும் ஒரெண் இருக்கக்கூடுமன்றோ. அப்படியே எண்ணி எண்ணிப் பார்க்குமளவில் அத்துணைக்கு அத்துணை அதிகமாய் ஓர்எண் இருக்கக்கூடு மென்பது எளிதிற் புலப்படும். இருக்கக்கூடுமென்பது உண்மையேயாக இருக்கும் அவ்வெண் யாதென்று இயம்புவதோ எந்நாளுமில்லை. ஆதலால் எண்களே இல்லை என்பதா, அல்லது எண்ணிற்குக் கணிதநூல் கண்டுரைத்த குணங்கள்தான் இல்லையென்பதா? இல்லையெனில் மதியின் பிழையாகுமே யன்றி எண்ணின் பிழையுமன்று, கணிதத்தின் பிழையுமன்று. கடவுளின் தன்மையும் அன்னதேயாம். தாயுமானவர் 'எண்ணே' என்று பரம்பொருளை அழைத்ததன் இரகசியமும் அன்னதே. இக்கணிதநூல் உதாரணத்தில் கடவுளின் உண்மையை நிலைநிறுத்த நினைக்கின்ற தத்துவநூலாசிரியர் போமளவு நாம் போகவேண்டிய அவசியம் இல்லையென்று கருதுகின்ற வேறோர் தத்துவநூலாசிரியர் லிப்னீஸ் என்பவர் இவ்வாதத்தைப் பின்னும் எளியதாக்குகின்றார். கடவுள் என்ற வொருவன் இருக்கின்றானென்பதை நிலைநாட்ட வழங்கும்ஆத்திகவாதங்களெல்லாம்ஒருபுறமிருக்க, அவன் கடவுள் ஏன் இருக்க வியலாது, என்று ஓர் கேள்வி கேட்கின்றார். கடவுள் உண்டு என்னுங் கொள்கையை உரைக்கவருகின்ற ஆத்திகர்கள் உரைதடுமாறித் தம் உணர்வின் தோற்றத்தைச் சொல்லால் அறிவுறுத்தமாட்டாமல் ஒவ்வொருபோது திகைத்துநிற்கவும் நேரலாம். மற்றினி, தம் மறிவுந் தாமுமே பெரியதென்று கருதுகின்ற நாத்திகவாதிகள், லிப்னீஸின் கேள்விக்கு என்ன பதில் உரைக்கவல்லார். கடவுளென்று ஒருவன் ஏன் இருக்க இயலாது. எண்களிலெல்லாம் பேரெண் யாதென்றுகேட்ட டேக்கார்ட்டின் (Des - Cartes) கேள்வியேபோல் லிப்னீஸின் இந்தக் கேள்வியும் முதற்பார்வைக்கு மிகமிக எளியது போன்றவோர் வஞ்சனைத்தோற்றமுடையது. இவ்வளவு எளியதான கேள்விகளால் தம் கொள்கையின் உண்மையை உணர்த்தவல்ல கல்வியும் நுண்ணறிவும் உடைமையாற்றான் அன்னோர் இவ்வுலகிற்கு ஒருவரெனும்படி வித்தகர்களாய் விளங்குகின்றனர். ஏன் கடவுள் இருக்க இயலாது? சிந்தித்துப் பாருங்கள். ஒருவன் தன் ஆயுள்நாளளவும் இதே சிந்தனையில் ஆழ்ந்திருந்தாலும் அந்தத்தில், கடவுள் இருக்க இயலாதென்பதற்குச் சார்பாய் ஒரு சொல் சொல்வதற்கும் வகையறியான். எனவே, கடவுள் இருக்க இயலாதென்பதைச் சா

திக்க மாட்டாமையால் அக்கடவுள் இருக்க இயலும் என்று கொள்ளவேண்டுவது கடனாகின்றது. இனி, கடவுளின் உண்மையை எய்துதற்கு எஞ்சிய படி ஒன்றே. கடவுள் இருக்கக்கூடுமாயின் அவர் இருக்கவும் இருக்கின்றார் என்னும் உறுதி லிப்னீஸின் தத்துவமுறைக்கு உரிய முடிவாகின்றது. ஆகையால் கடவுள் இருக்கின்றார் என்பார் அவர்.

இத் தத்துவமுறையிலும் அதன் முடிவிலும் சிலருக்கு விளையக்கூடிய ஐயந்திரிபுகளைத் தீர்ப்பதற்கு இவ்விடயத்தை இன்னுஞ் சிறிது தொடரவேண்டும். உண்டு என்பதற்கு ஒருபொருள் இலக்காகவேண்டும் என்பது எவ்வளவு இன்றியமையாததோ அத்துணை இல்லை என்பதற்கும் ஒருபொருள் இலக்காகவேண்டும் என்பது இன்றியமையாததேயாம். இதன்படி 'கடவுள் இல்லை' என்னும் வாசகமே அவன் இருக்கின்றான் என்பதை உறுதிப்படுத்துகின்றது. இல்லாத ஒருபொருளை இருக்கின்றதென்று உரைப்பது எத்துணை இயலாதோ அத்துணையே இல்லாத ஒருபொருளை இல்லையென்று உரைப்பதும் இயலாது. இங்கு இதன் உண்மையை மயங்குதலின்றித் தெளிந்துகொள்ள நாம் இரண்டொரு விடயங்களை உய்த்துணர்ந்து கருத்துட்கொள்ளவேண்டும். ஒரு பொருளானது, பெரும்பாலும், அதற்குரிய இடம் காலம் சினை குணம் தொழில் ஆகிய இவைகளைச் சார்ந்தே கருதப்படுகின்றது. நாம், இல்லை என்று இயம்ப இயலாதது, தன் தனித்தன்மையில் இருக்கும் ஒரு பொருளையேயன்றி மற்ற ஐந்தினையுந் தழுவிய விகற்பத்தால் விளைகின்றதோற்றத்தையன்று. பத்துத்தலையுடைய சிங்கம் இல்லை என்னுங்கால் இல்லாத பொருள் ஒன்று இல்லையென்று இயம்பப்பெறவில்லையோ என்று சிலர் எண்ணலாம். இது தவறு. சிங்கம் என்ற பொருளுமுண்டு, தலை என்ற சினையுமுண்டு; மற்று, பத்துத் தலைகளையுடைய சிங்கத்தின் விற்பம் இல்லையென்பதே இவ்வாக்கியத்தின் கருத்து. அப்படியே, பாடுகின்ற கல் இல்லை என்னுமிடத்தும், கல் என்னும் பொருளும் பாட்டு என்னுந் தொழிலும் உண்மையேயாக, அப்பாட்டென்னுந் தொழிலைச் சார்ந்த கல்லென்னும் பொருளின் விகற்பமே மறுக்கப்படுகின்றதென்பது வெளிப்படை. இவ்வண்ணம் உதாரணங்கள் பல பெருக்கவேண்டா. இன்னபடி மற்றவற்றோடு சாராமல் தன் தனி நிலையிலேயே தானாக இல்லாத பொருளை இல்லையென்று சொல்ல இயல்கின்றதோவென்று சோதித்துப் பாருங்கள். எதிர்ப்பட்டோரையெல்லாம், இல்லாத பொருளொன்றைச் சொல்லும்படி கேட்டுப் பாருங்கள். இதுவும் முதலில் மிகவும் சுலபம்போல் தோன்றும். பிறகு முயல முயல அதன் உண்மையும் மெல்லமெல்ல மனத்தகத்தே மலர்வதாகும். எனின், இல்லாத பொருளை இல்லை என்று இயம்பமுடியாதாகையால், இல்லை என்று இயம்பப்படும் ஒரு பொருளும் (பொருளே, அதன் விகற்பமன்று) இருக்கவேண்டுமென்பதே இன்றியமையாததாய் முடிகின்றது. ஆதலால், இருக்கின்ற பொருளை இல்லை என்பதைக்காட்டிலும், இல்லாத பொருளை இல்லை என்பதே கடினமாகின்ற விந்தை இதனை விளம்பியபின் தெளிந்துகொள்ளல் அருமையாகாதென நினைக்கின்றோம். இக்கருத்தைக் கடவுளோடு சார்த்திச் சோதித்துப் பார்க்குமிடத்து விளையும் பயன் சிறியதன்று. கடவுள் இல்லை என்ற எதிர்மறை வழக்கு இயம்புவதற்கு இயல்வதாகிய காரணம் ஒன்றே அவ்வாறு இல்லை என்று இயம்பப்படும் பொருள் ஒன்று இருக்கத்தான் வேண்டும் என்று சாதிப்பதாய் முடிகின்றது. ஆதலின் இவ் வெதிர்மறை வாசகம் தன்னையே தற்கொலை புரிந்துகொள்கின்றதென்னலாம்."

இத்தனையுங் கருதியன்றோ இராமன், 'இல்லாதனை இல்லை' என்று இளங்குமரனுக் கியம்புவானாயினன்.

இயம்பி, பொருத சிந்தைத் தம்பி பின்வரச் சீதையோடும் சென்று நோக்க, "கடக்கவொண்ணா வினையென வந்துநின்ற மானெதிர் விழித்ததன்றே."

நோக்கிய மானை நோக்கி நுதியிழை மதியி னென்றுந்
தூக்கிலனன் றிதென் றான தன்பொருள்செல்லலாகும்
சேக்கையி னரவு நீங்கிப் பிறந்தது தேவர் செய்த
பாக்கியமுடைமையன்றோ வன்னதுபழுதுபோமோ.

[தம்மை விழித்துப்பார்த்த மானை இராமன் பார்த்து, நுண்ணிய தன் அறிவினால் ஒன்றும் ஆராயாமல் "இந்த மான் நன்றாயிருக்கின்றது" என்றான். அவ்வாறு இராமன் ஆராயாமல் நன்று என்று கூறியதற்குக் காரணம் சொல்வோம். அது யாதெனில்—பாம்புப் படுக்கையை விட்டுத் திருமால் இங்கு இராமனாகப்பிறந்தது தேவர்கள் பெற்றிருக்கின்ற பாக்கியத்தால் அன்றோ; அதுதான் வீணாகுமோ]

என்று கம்பர் மிகவிரைந்து, சங்கேதப்படி அனைத்தும் விளைகின்றதென்பதை நமக்கு நினைவுபடுத்துகின்றார். இதற்கிடையில், வெறுப்புமீதூர நின்ற இலக்குவனை நோக்கி இராமன்,

என்னொக்கு மென்ன லாகும்
இளையவ விதனை நோக்காய்
தன்னொக்கு முவமை யல்லால்
தனையொக்கு முவமை யுண்டோ
பன்னக்க தரள மொக்கும்
பசும்புன்மேற் படரு மென்னா
மின்னொக்குஞ் செம்பொன் மேனி
வெள்ளியின் விளங்கும் புள்ளி

[இளையோய், இந்த மானை உற்றுப் பார். தன்னைத் தானே ஒத்திருக்கின்றது என்பது அல்லாமல், இதற்கு உவமை ஆகவல்லது ஒன்று உளதோ, ஆதலின், எது இதற்கு ஒப்பாகும் என்று சொல்லக்கூடும்? இதன் பற்கள் பிரகாசிக்கின்ற முத்துக்களை ஒக்கும். பசிய புல்லின்மேல் படர்கின்ற இதன் நாக்கு மின்னலை ஒக்கும், இதன் மேனி செம்பொன் மயமானது. புள்ளிகள் வெள்ளியைப்போல் விளங்குகின்றன]

என அவன் வெறுப்பினை வியப்பாக மாற்ற முயன்றனன் "தன்னொக்கும் உவமையல்லால் தனையொக்கும் உவமை இல்லாத் தன்மையால் இம்மான் என்னையே ஒக்கும் என்னலாகும்" என்று இராமன் கூறினனென இலக்குவன் பொருள்கொண்டனனாயின், அண்ணனது பெருமிதங்கண்டு இளையோன் முகத்தில் ஓர் இளநகை தவழ்ந்திருக்கும். அது தோன்றாமல் இலக்குவன் கைவில்லே சிறிது குனிக்கின்றது போலும்; ஆதலின் இராமன் மீண்டும்,

வரிசிலை மறைவ லோனே மானிதன் வடிவை யுற்ற
அரிவையர் மைந்தர் யாரே யாதரங் கூர்கி லாதார்
உருகிய மனத்த வாகி யூர்வன பறப்ப யாவும்
விரிசுடர்விளக்கங்கண்ட விட்டில்போல்வீழ்வகாணாய்

[கட்டமைந்த வில்லின் கல்வியில் வல்லவனே, இந்த மானின் வடிவைக் கண்ட மாதரிலும் ஆடவர்களிலும் ஆசை அதிகங்கொள்ளாதவர் யார். ஊர்வனவும் பறப்பனவும் எல்லாம் இதனைக்கண்டு மனம் உருகி, விரிந்த ஒளியை உடைய விளக்கைக்கண்ட விட்டில்பூச்சியைப்போல் இதன்மேல் வந்து விழுகின்றன, காண்]

என்றான். "ஆம், அதுபற்றி நாமும் விட்டில் ஆகிமடிய வேண்டுமோ" என மறுகுறு மனம்மிக மாழ்குகின்றான் இளையோன். இராமனுக்கும் சீதைக்குந் தீங்கு வராமற் காக்கவேண்டுமே என்று இவ்விளையோன் படுகின்ற பாடு சிறியதன்று.



ஆரிய னனைய கூற வன்னது தன்னை நோக்கிச்
சீரிய தன்றி தென்று சிந்தையிற் றெளிந்த தம்பி
காரிய மென்னை யீண்டுக் கண்டது கனக மானால்
வேரியந் தெரியல் வீர மீள்வதே மேன்மை யென்றான்

[இராமன் அவ்வாறு சொல்லவும், அந்த மானைநோக்கி இது சீருடையது அன்று என்பதை நன்றாக அறிந்த தம்பியாகிய இலக்குவன், "வாசனை யமைந்த மாலையை அணிந்த வீரனே, சீதை சொன்னபடி இது பொன்மயமானது என்பதைக் கண்டபிறகு இனி நமக்கு இங்கு என்ன வேலை, நாம் திரும்பிச் செல்வதே மேன்மையாம்," என்றான்.]

"பற்றித் தருகஎன்பென்" என்ற எண்ணமுடன் ஜானகி வந்தாளேனும், "காணத்தரும்" என்றமட்டில் நிறுத்தினாளாதலின், "நன்று, கண்டாயிற்று, இனி மீள்க" என இளையோன், பற்றித்தா எனக் கேட்கவிருந்த அவள் முகக்குறி மொழியாக மாறா முன்னம் மீளும்பரிசு முயன்றுரைக்க,

அற்றவன் பகரா முன்னம்
அநகனை யழகி யாளும்
கொற்றவன் மைந்த மற்றைக்
குழைவுடை யுழையை வல்லை
பற்றினை தருதி யாயிற்
பதியிடை யவதி யெய்தப்
பெற்றுழி யினிதுண் டாடப்
பெறற்கருந் தகைமைத் தென்றாள்

[இலக்குவன் அவ்வார்த்தைகளைச் சொன்னவுடன், அழகியான சீதையும், குற்றமற்றவனாகிய இராமனைப் பார்த்து, "சக்கரவர்த்தி திருமகனே, காண்போர் மனங்குழைதவற் கொத்த இந்த மானை, விரைவிற் பிடித்துத் தருவாயானால், நம் வனவாசம் முடிவடைந்தபின், நம் அயோத்திநகரத்தில் இனிமையாக வைத்து விளையாடுதற்குப் பெறலரும் தன்மை உடையதாம் இது"—என்றாள்]

இதற்குத்தான் அஞ்சி விரைந்து மீளவேண்டினன் இளையோன். இனி, இராமனேனும் இதற்கு ஒவ்வாமல் மறுப்பனோ என்னின் அதுவும் இல்லை. 'செய்வன்' என்று மனைவியின் வேண்டுகோளிற்கு அவனும் இணங்கவே, இவன் மனம் நொந்து, "வெய்ய வல் அரக்கர்வஞ்சம் விரும்பினார் வினையிற்செய்த கைதவ மானென்று அண்ணல் காணுதி கடையின்" என்றான். இது பயன்பட்டிலது; "மாயமாயின் கொன்று அரக்கன் ஒருவனை அழித்தகடன் கழிக்கின்றேன், மற்று இம்மான் தூயதேயாயின் பற்றிக் கொணர்கின்றேன், இவ்விரண்டில் ஒன்றும் தீயதில்லையே," என்று தேவரை இடுக்கண் தீர்க்கும்பொருட்டு, அவதரித்திருந்த இராமன் இயம்பினான். இன்னமும் இலக்குவன் இணங்கானாகி,

பின்னின்றா ரினைய ரென்றும்
உணர்கிலம் பிடித்த மாயம்
என்னென்றுந் தெளித ரேற்றாம்
யாவதீ தென்று மோராம்
முன்னின்றார் முறையி னின்றார்
முனிந்துள வேட்ட முற்றல்
பொன்னின்ற வயிரத் தோளாய்
புகழுடைத் தாமன் றென்றான்.

[அழகுடைய வயிரம்போன்ற தோள்களையுடையவனே, இம்மானை முன்னே அனுப்பிவிட்டுப் பின்னே நிற்பவர் எத்தன்மையர் என்பதை அறியோம்; அவர் கருத்தில் கொண்ட மாயம் என்னவென்பதும் நாம் தெளிந்துகொண்டிலோம்; இது என்னதென்றும் அறியோம். முதன்மையராகிய தவசிகள் ஒழுக்கத்தில் நின்ற நம்போன்றவர்களால் வெறுப்பதற்குரிய வேட்டையைச் செய்தல் புகழுடைய காரியம் ஆகாது"—என்றான்.]

இவைகளில், 'தவநெறி பூண்டவர் வேட்டைமேற் செல்லல் நேரிதன்று' என்று தகையப்புகுந்தது மிகை. 'இம்மான் அரக்கர் மாயமாயின் கொல்வேன், அலதேல் பற்றிக் கொணர்வேன்,' என்றமையால் அடுதொழில் வேட்டமன்றாம் அது. ஆதலின், அதனை விடுத்து ஏனையவற்றிற் கெதிர் விளம்புவானாகி,

பகையுடை யரக்க ரென்றும்
பலரென்றும் பயிலு மாயம்
மிகையுடைத் தென்றும் பூண்ட
விரதத்தை விடுது மென்ற
னகையுடைத் தாகு மன்றே
யாதலி னன்றீ தென்னத்
தகையுடைத் தம்பிக் கந்நாட்
சதுமுகன் றாதை சொன்னான்.

[பகைகொண்ட அரக்கர்கள் என்றும், அவர் பலர் பின் நிற்கின்றா ரென்றும், அவர் செய்யும் மாயம் அதிகம் என்றும், அவர்களைக் கொன்று தீர்ப்போம் என்று நாம் மேற்கொண்ட விரதத்தை விட்டுவிடுவோம் என்றும் பேசுதல் பரிகசத்திற் கிடமாம் அன்றோ? ஆதலின் இது செய்தல் நன்று" என்று பெருமையுடைய தம்பிக்கு, பிரம்மதேவனது தந்தையாகிய இராமன் கூறினான்.]

இராமன் ஆண்மை பேசுகின்றான், உண்மையே; ஆயினும் பெண்ணேவல் செய்தொழுகும் ஆண்மைபோல் அது தோன்றுகிறது. வள்ளுவர் வகுத்துக் காட்டிய பெண்வழிச் சேறல் என்னும் பழிக்குப் பாத்திரமாக இராகவன் நிற்கும் இந்நிலையில் அவனைக் காக்கும்பொருட்டு, சேக்கையின் அரவு நீங்கிப் பிறந்தவன் என்றும், தேவரை இடுக்கண் தீர்ப்பவன் என்றும், சதுமுகன் தாதை என்றும் அவனைப் பலபடக் குறித்து, சங்கேதப்படி இது நிகழ்கின்றதென்பதைக் கம்பர் ஓதுவோர்க்கு நினைவுசெய் தளிக்கின்றார்.

எமாங்கதத் திளவரசன்
ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,
எழுதியவோர்
செந்தமிழ்க்காதை.
கலாநிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை ரூ. 1—4—0

# தமிழ்ப் பாடம் 74.

## நள வெண்பா—கலி நீங்கு காண்டம்

[449-வது பக்கத் தொடர்ச்சி]

இறுமாந்து வந்த புஷ்கரன் நளனுடன் ஆடிய மறு சூதில் எல்லாவற்றையுந் தோற்று வந்தவழியே திரும்பிப்போனதை இனிவரும் நான்கு செய்யுள்கள் கூறுகின்றன.

செங்கோ லரசன் முகநோக்கித் தேர்ச்சியிலா
வெங்கோ லரசன் வினவினன்—அங்கோலக்
காவற் கொடைவேந்தே காதலற்குங் காதலிக்கும்
யாவர்க்குந் தீதிலவே யென்று. 88.

அன்வயம்:—தேர்ச்சி இல்லா வெம்கோல் அரசன், செங்கோல் அரசன் முகம்நோக்கி, "அம் கோலக் காவல் கொடை வேந்தே, காதலற்கும் காதலிக்கும் யாவர்க்குந் தீது இலவே" என்று வினவினன்.

பொழிப்புரை:—கலிநீங்கிய நளன் இப்பொழுது தன் செல்வத்தையெல்லாம் மீண்டும் பெறுவதற்கு வந்திருப்பதைத்தேர்ந்துகொள்ளாத அந்தக் கொடுங்கோல் அரசனாகிய புஷ்கரன், செங்கோல் அரசனாகிய நளனுடைய முகத்தைப் பார்த்து, "அழகிய அலங்காரம் அமைந்த காவல் அரண்களையுடையவனும் கொடையிற் சிறந்தவனுமாகிய நளவேந்தனே, உனக்கும், உன் மனைவிக்கும் மக்கள்முதலிய யாவருக்கும் தீது ஒன்றும் இல்லாமல் நீங்கள் சுகமாக இருக்கின்றீர்களா" என்று கேட்டான்.

விரிவுரை:—புஷ்கரன் கேட்ட இது குறும்புக் கேள்விபோல் தோன்றுகின்றது. அவர்களை அவன் கெடுத்தவரையில் கெடுத்துவிட்டுப் பிறகு பரிகசமும் செய்கின்ற கொடுமை யிது. 'காதலற்கு', என்ற அச்சொல் படர்க்கையிலிருப்பதால், அதனைக் 'காதலனாகிய உனக்கு' என்னச் சிறிது வலிந்து பொருள்கொள்ள வேண்டியிருக்கின்றது. அச்சொல்லில் வல்லின றகர மெய்க்குப் பதிலாய் இடையின ரகரமெய் இருக்குமானால், அது 'காதலர்க்கு' என்று ஆகி, மக்களைக் குறிப்பது இயற்கையாகும். "உன் இரு மக்களுக்கும் மனைவிக்கும் மற்ற யாவருக்கும் தீது இலவே," என்று கேட்குமளவிலேயே 'நீயும் க்ஷேமமா' என்பதும் அடங்குமாதலால் 'காதலர்க்கு' என்ற பாடபேதம் இருக்குமாயின் அதுவே கொள்ளத்தக்கது.

குறிப்பு:—செம்கோல், வெம்கோல், என்னும் தொடர்கள் பண்புத்தொகைகள்—செம்மை ஆகிய கோல், வெம்மையாகிய கோல் என விரியும்.

கொடை வேந்தே, என்பது கொடையால் சிறந்த வேந்தன், என விரியும். ஆகையால் மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை ஆகும். அல்லது, கொடையிற் சிறந்த வேந்தன் என, ஐந்தாம் வேற்றுமை ஏதுப்பொருளில் கொள்ளலாம்.

தீது தருகலிமுன் செய்ததனை யோராதே
யாது பணையமென வியம்பச்—சூதாட
மையாழி யிற்றுயிலு மால்பராய் வண்மைபுனை
கையாழி வைத்தான் கழித்து. 89.

பதப்பிரிவு:—தீது தரு கலி முன் செய்ததனை ஓராதுஎ யாது பணையம் என இயம்ப சூது ஆட மை ஆழியில் துயிலும் மால் பராய் வண்மை புனை கை ஆழி வைத்தான் கழித்து.

அன்வயம்:—தீதுதரு கலி முன் செய்ததனை ஓராது, "பணையம் யாது?" என (புஷ்கரன்) இயம்ப, (நளன்) மை ஆழியில் துயிலும் மால் பராய், வண்மை புனை கைஆழி கழித்து சூது ஆட வைத்தான்.

பதவுரை.

தீது - தீமையை
தரு - உண்டாக்குகின்ற
கலி - கலிபுருஷன்
முன்-முதற்சூது ஆடியபோது
செய்ததனை - செய்த வஞ்சனையை
ஓராது - உணராமல், (புஷ்கரன்)
"பணையம் - பந்தையப்பொருள்
யாது - எது"
என - என்று
இயம்ப - கேட்க, (நளன்)
மை - கரிய
ஆழி - கடலில்
துயிலும் - கண்வளர்கின்ற
மால் - திருமாலை
பராய் - வணங்கி
வண்மை - கொடையை
புனை - அணிந்திருக்கின்ற
கை - கையில் இட்டிருந்த
ஆழி - மோதிரத்தை
கழித்து - கழற்றி,
சூது - சூதினை
ஆட - ஆடுவதற்குப் பணையமாக
வைத்தான் - வைத்தான்.

விரிவுரை:—திருமால் பள்ளிகொண்டிருப்பது வெண்மையான பாற்கடலாயினும் அதனை 'மை ஆழி' என்று புகழேந்தி அழைத்ததற்குக் காரணம் இருக்கின்றது. திருமாலினது கரிய திருமேனியின் ஒளி நிறம் கதுவிப் பாற்கடல்முழுவதும் கருங்கடல்போல் தோன்றும்படி செய்திருக்கும்.

குறிப்பு:—தருகலி, என்பது வினைத்தொகை. தருகின்ற கலி, என விரியும். தந்த தருகின்ற தரும், என்ற பெயரெச்சங்கள் காலங்காட்டும். அது இங்குக் காலம் காட்டாமல் 'தரு' என்று மாத்திரம் குறைந்து நிற்பதால் வினைத்தொகை ஆயிற்று.

அப்பலகை யொன்றி னருகிருந்தோர் தாமதிக்கச்
செப்பரிய செல்வத் திருநகரும்—ஒப்பரிய
வன்றானை யோடு வளநாடும் வஞ்சனையால்
வென்றானை வென்றானவ் வேந்து. 90.

கருத்து:—முன் தன்னை வஞ்சனையால் வென்று செல்வமெல்லாம் அபகரித்துக்கொண்ட புஷ்கரனை இப்பொழுது நளன் சூதாட்டத்தில் வென்று அவைகளை மீண்டும் பெற்றான்.

குறிப்பு:—முதலில் வந்த 'வென்றான்' என்றது வினையாலணையும் பெயர். அது இரண்டாம் வேற்றுமை



பெற்று, 'வென்றானை' என நின்றது. மற்ற 'வென்றான்' என்ற சொல், வினைமுற்று.

அந்த வளநாடு மவ்வரசு மாங்கொழிய
வந்த படியே வழிக்கொண்டான்-செந்தமிழோர்[நா]
நாவேய்ந்த சொல்லா னளனென்றுபோற்றிசைக்கு
கோவேந்தற் கெல்லாங் கொடுத்து. 91.

பொழிப்புரை:—அந்த வளநாட்டையும் அதன் ஆட்சியையும் புஷ்கரன் தோற்று, செந்தமிழ்ப்புலவர்கள் நாவினால் தொடுத்த சொற்களால் நளன் என்று துதிக்கும் சக்கரவர்த்திக்கு எல்லாவற்றையும் கொடுத்துத் தான் வந்தவழியைப் பார்த்துக்கொண்டு போனான்.

## இலக்கணம்

முன் உரைத்தபடி, உம்மைத்தொகைப்புறத்தில்சில சொற்கள் தொக்கு இருந்து அன்மொழித்தொகை ஆவதுபோலவே, வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமத்தொகை ஆகிய மற்ற நான்கு தொகைநிலைத்தொடர்களுக்குப் புறத்தேயும் சில சொற்கள் தொக்கு இருக்கின்ற காரணத்தால் அன்மொழித்தொகைகள் ஆகலாம்.

"நான் ஓர் அணியிலக்கணம் வாங்கினேன்," என்ற வாக்கியத்தில் உள்ள "அணி யிலக்கணம்," என்னும் தொடரை அத்தொடர்வரையில் பார்த்தால், அது நான்காம் வேற்றுமைத் தொகையாகும். 'அணிக்கு இலக்கணம்' என விரியும். ஆனால் அவ்வளவு மட்டில் விரிவது அவ்வாக்கியத்தின் பொருளுக்குப்போதாது. "நான் ஓர் அணிக்கு இலக்கணம் வாங்கினேன்" என்றால் என்ன அர்த்தம். இலக்கணத்தை எவ்வாறு வாங்க இயலும்? ஆகையால் அத்தொடர், 'அணிக்கு இலக்கணம் எழுதியுள்ள புத்தகம் வாங்கினேன்' என்று விரியவேண்டியது அவசியமாகின்றது. எனின் 'எழுதி உள்ள புத்தகம்' என்ற சொற்களும் தொக்கு இருக்கின்றன. இவ்விதம், வேற்றுமைத் தொகைக்குப் புறத்திலே பின்னும் சில சொற்களும் தொக்கு இருத்தலால், 'அணியிலக்கணம்' என்னும் தொடர் இவ்வாக்கியத்தில் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை ஆகும். அவ்வேற்றுமையும் நான்காம் வேற்றுமையா யிருக்கின்றபடியால், நான்காம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை யாகும். அவ்வாறன்றி "நான் அணியிலக்கணம் கற்றேன்" என்பது வாக்கியமாயின் 'நான் அணிக்கு இலக்கணம் கற்றேன்' என்று அத்தொடரின் இடையில் வேற்றுமை உருபு மாத்திரம் விரிவது பொருளுக்குப் போதும். ஆகையால் இப்பொழுது இது வேற்றுமைத் தொகைதான், அன்மொழித்தொகை அன்று.

இவ்விதம் மற்ற ஐந்து வேற்றுமைத் தொகைகளுக்குப் புறத்தேயும் அன்மொழித் தொகைகள் பிறக்கக் கூடும். வேற்றுமைத் தொகைகள் அல்லாத வினைத்தொகை, பண்புத்தொகை, உவமத்தொகைகள் புறத்தேயும், உம்மைத்தொகைக்குப் புறத்தே பிறப்பதே போல், அன்மொழித் தொகைகள் பிறக்கும்.

சுயம்வர காண்டம், 20-வது செய்யுள் "எழுவடு தோண் மன்ன இலங்கு இழை ஏர் துரண்ட" என்ற முதலடியில் உள்ள 'இலங்கு இழை' என்னும் தொடர் வினைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகைக்கு நல்ல உதாரணம். 'இலங்குகின்ற' என்றிருக்க வேண்டிய பெயரெச்சம் காலம் மறைந்து 'இலங்கு' என நிலைமொழியாய் நிற்பதால், 'இலங்கு இழை' என்பது அத்தொடர்வரையில் வினைத்தொகை ஆகின்றது. எனினும் 'இலங்குகின்ற இழை' என்று மட்டும் விரிந்தால் அத்தொடர் இவ்வடிவில் ஒன்றும் அர்த்தம் தரவில்லை. இழை (ஆபரணம்) ஏர் ஓட்டமுடியாது. இந்த இடத்தில் ஆகையால் 'இலங்குகின்ற இழைகள் அணிந்தவர்கள்' என்று அத்தொடர் விரியவேண்டும். எனவே இறுதியிலும் 'அணிந்தவர்கள்' என்று ஒரு சொல்லும் தொக்கு இருக்கின்றது. ஆகையால் இதனை வினைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகை என்று அழைப்பர். 'இலங்கு இழை' என்றதொடர் எப்பொழுதும் அன்மொழித்தொகையாகவே இருக்கவேண்டும் என்ற அவசியமில்லை. அது வினைத்தொகை அளவிலேயே நின்றும் விடலாம். 'இந்த இலங்கு இழை என்ன விலை' என்ற வாக்கியத்தில் 'இலங்குகின்ற இழை' என்று விரிந்தாலே பொருள் பெற்றுப் பின் ஒன்றும் தொக்கு இருக்கவில்லையாகையால் அது அன்மொழித் தொகையன்று; வினைத்தொகையே.

இப்படியே, ஆய் இழை, செறிவளை, புரிகுழல், தாழ்குழல், என்னும் தொடர்கள், ஆய்ந்த இழைகளை அணிந்தவள், செறிந்த வளைகளை அணிந்தவள், புரிந்த கூந்தலை யுடையவள், தாழ்ந்த கூந்தலை உடையவள், என விரியவேண்டிய இடங்களில் வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைகள் ஆகும். எனினும், சுயம்வரகாண்டம் 3-வது செய்யுளில் 'ஆய் இழையார்' என்று வந்திருக்கின்ற தொடர் அன்மொழித்தொகை அன்று; ஏனெனில் இழையார், என்பதற்கு இழைகளை அணிந்தவர் என்று அர்த்தம். ஆகையால், இழையார் என்ற வருமொழிக்குப் பின் வேறொன்றும் மறைந்திருக்கவில்லை. எனவே, 'ஆய்ந்த இழையார்' என்ற மட்டில் அது விரிந்தால் போதும். ஆகையால் அது வினைத்தொகை மாத்திரந்தான்.

இனி, பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைகளைப் பார்ப்போம். கலிதொடர் காண்டம் 127வது செய்யுள் இரண்டாவது அடியில் 'பைந்தொடி' என்ற தொடர் வந்திருக்கின்றது. அத்தொடர் தன் வரையில் 'பசுமை ஆகிய வளையல்' என விரிந்து நிற்கும். ஆகிய என்னும் பண்பு உருபு, நிலைமொழிக்கும் வருமொழிக்கும் இடையே தொக்கு இருத்தலால் அத்தொடர் பண்புத் தொகைநிலைத் தொடர். எனினும், வேடன், "பசுமைஆகியவளையலை' அன்று தன்னோடு வரும்படி அழைத்தது. பசுமை ஆகிய வளையலை அணிந்தவளைத்தான் அழைத்தான். ஆகையால் அப் பண்புத்தொகைக்குப் புறத்தேயும், 'அணிந்தவள்' என்ற ஒரு சொல் தொக்கு இருக்கின்றது. எனவே, இது பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. சுயம்வரகாண்டம் 90-வது செய்யுள் முதலில் 'பைந்தொடியாள்' என்று வந்திருக்கின்றதொடர் அன்மொழித்தொகைஅன்று. தொடியாள் என்றாலே வளையலை அணிந்தவள் என்பது அர்த்தம். ஆகையால் புறத்தே ஒன்றும் மறைந்திருக்காமல், பண்புத்தொகையாக மாத்திரம் அத்தொடர் நிற்கின்றது.

இனி, சுயம்வரகாண்டம் 41-வது செய்யுளில் வந்தி

ருக்கின்ற 'பொற்றொடிக்கு' என்னும் தொடர் அன்மொழித் தொகையே. ஆனால் அது பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை அன்று. அது விரிந்தால், "பொன்னால் செய்த தொடியை அணிந்தவளுக்கு" என விரியும். வேறுபாடு உண்டானது தொடிக்கு அன்று; தொடியை அணிந்தவளுக்குத்தான். ஆகையால் அத்தொடரின் இறுதியில், 'அணிந்தவள்' என்ற ஒரு சொல் மறைந்திருக்குங் காரணம் பற்றி அது அன்மொழித்தொகை யாவதை அறியலாம். எனினும், நிலைமொழிக்கும் வருமொழிக்கும் இடையே மறைந்திருப்பது 'ஆகிய' என்னும் பண்பு உருபு அன்று. ஆகையால் பண்புத் தொகை ஆகாது. இடையே தொக்கு இருப்பன ஆல், என்னும் மூன்றாம் வேற்றுமை உருபும், செய்த என்னும் சொல்லும் ஆம். ஆகையால் 'பொன்தொடி' என்பது மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. இங்கு அணிந்தவள் என்ற சொல்லும் புறத்தில் மறைந்திருப்பதால், அது மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

'அக் கருங்குழலை இப்பெருந்தகை காதலித்தான்' என்ற வாக்கியத்தில் கருங்குழல், பெருந்தகை, என்ற இரண்டு தொடர்களும் பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைகள் ஆவதைக் காணலாம். ஏனெனின், அவை, 'கருமை ஆகிய குழலை உடையவள், என்றும், 'பெருமை ஆகிய தகையை உடையவன்' என்றும் விரியவேண்டும். தகை—குணம்.

இவ்விதம், உவமத்தொகைப் புறத்தும் அன்மொழித்தொகைகள் பிறக்கலாம். 'மயில் இயல்' என்ற தொடர். 'மயில்போன்ற இயல்' என விரியும். ஆகையால், அது உவமத் தொகை. (இயல்—தன்மை) 'மயிலியல் நின்றாள்' என்பது வாக்கியமாயின் அத்தொடர், 'மயில்போலும் இயலை உடையவள்' என விரியுமாகையால், அன்மொழித் தொகையாகும். துடியிடை, பிறைநுதல், முதலியவைகள் மாதர் என்னும் பொருளில் வரும்போது உவமத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைகளாம்.

# ஞான தீபம்

[456-வது பக்கத் தொடர்ச்சி]

நம்முடைய அகத்தின் அமைப்பிற்கும் குணத்திற்கும் ஏற்ற விஷயங்களையும் பொருள்களையுந் தான் நாம் அறிந்து பெற்று அநுபவித்தற்கியலும்.

மதம் என்பது சமூகச் சீர்திருத்த மன்று; இழிந்த பழக்க வழக்கங்களினின்று விடுவித்து, மனத்தை விரித்து, நெஞ்சைத் தூய்மைப்படுத்தி, உட்சக்தியைப் பெருக்கி வெளிக்கொணர்ந்து, அகமும் புறமும் ஆனந்திக்கச் செய்து, ஈச்வர தரிசனம் பெற்று உய்ய உதவுதலே மதத்தின் இலக்ஷணமாகும்.

சஞ்சலங்கள் அடங்கி, பற்றுக்களினின்று விடுபட்டுச் சாந்திநிலை யெய்துதலே முக்தி எனப்படுவது.

எல்லாக் கலைகளின் முடிவையும், பலதிற அநுபவங்களின் சாரத்தையும், நானாவித மேன்மைகளின் குணத்தையும் திரட்டித் தன்னுள்ளடக்கி விளங்குவதாம் மதம். இவ் வுலகவாழ்க்கையிலேயே தெய்விக சக்தி பூரிக்கப்பெற்றுத் தயங்கித் தள்ளாடும் மதியை நிறுத்தி, அகவொளியாம் தெய்விக ஜோதியைஒளிரச் செய்து பரப்பி, நோய்களாற் பீடிக்கப்பட்ட தேகத்தை ஆரோக்கியப் படுத்தி, நிரதிசயானந்தத்தில் திளைக்கச் செய்வது மதத்தின் விசேஷகுணமாகும்.

தர்க்கசாஸ்திர முறைகளினால் மூலவஸ்துவைப் பார்த்தறிதலரிது; சுகிர்த வுணர்ச்சியின் தன்மையைக் கூரிய அறிவைக்கொண்டு உணர்தற்கும் அநுபவித்தற்கும் இயலாது.

ஞானத்தினால் உணர்த்தப்படும் ஓர் புறவஸ்துவன்று கடவுள்; ஆனால், ஞானத்திற்கு அடிப்படையும் ஆதாரமும் பிறப்பிடமுமாவது அது.

அகண்டாகார சச்சிதானந்தப் பரிபூரணத்தை ஈச்வர பாவனையில் உருவகப்படுத்தி நம்மைத் தெளிவித்தல் மதத்தின் குணாதிசயங்களி லொன்றாகும்.

பகிர்முக ஆராய்ச்சியினாற்றான் சத்பொருள் தெளிவாகும். ஏகாந்தமும் அமைதியும் தியானத்திற்கு இன்றியமையாத சாதகங்களாவன ; புலக்கட்டும் மன அடக்கமும் பக்கபலங்களாகும். சத் விஷயங்களில் தோய்ந்து, மூலவஸ்துவை நோக்கி மனத்தை உயர்த்தி நிறுத்துதற்கான சக்திதான் தபஸ் என்பது. நாலா பக்கங்களிலும் சிதறி ஓடும் சக்தியையும், மனப்போராட்டங்களையும், உள்ளத்தின் பிரேமைகளையும், மங்கி யொடுங்கிக் கிடக்கும் கருத்துக்களையும், தேக வுறுப்புக்களின் தொழில்களையும் எல்லாம் ஒழுங்கு படுத்தி, ஒரே பாதையில் இருத்தி, ஒரே நோக்கத்தில் நாட்டி உயர்த்தக்கூடியதும் தியானசக்தியே யாம். இவ்விஷயத்தில் வெற்றியும் தோல்வியும் ஒருவனுடைய ஆர்வத்தின் சக்தியையும், முயற்சியின் சிரத்தையையும், பொறுமையின் அளவையும் பொறுத்துளவாம்.

சுய ஞானத்தினாற்றான் சத்தைக் கிரஹிக்கின்றோம்; தர்க்கமுறையால் அதைப்பற்றி விஸ்தரிக்கின்றோம். விரித்து விளக்குதல் புத்தியின் தொழிலாகும். சுய ஞானம் ததும்பவே, சிந்தனை அதை உருவகப்படுத்திப் பிறர்க்கு அதன் குணத்தை அறிவுறுத்துகின்றது. புத்தி ஆயுதங்களை ஒத்தது. அளையினின்று பொறிகள் பறத்தல்போல், சுயஞானத்தினின்று சத் விஷயங்கள் வெளியாகின்றன. ஆழ்ந்து விரிந்த அனுபவமும, பரந்துஉயர்ந்த ஞானமும் பரிணமிக்கப்பெற்றவர்தாம் மூலப் பொருளை உணரக்கூடும் ; அவ்வுணர்ச்சியினாற்றான் தெய்வ சகாயம் பெற்றுப் பிறர்க்கு உதவி செய்தற்கியலும்.

வலி வருத்த மேக்கங்களின் வழியாகத்தான் இன்பம் சுரக்கின்றது.

மனத் தெளிவும் உள்ளத்தூய்மையும் பரிபூரணமாகப் பெற்ற சீரியர் தம் யாண்டை, இலளிதப்புலவர்களைப்போல், காவியங்களாலும் சித்திரங்களாலும் சிலைகளாலும் அறிவுறுத்துவது இல்லை; மற்று, தங்க



ளுடைய களங்கமற்ற வாழ்க்கை வாயிலாக நிமிஷந் தோறும் நிரூபித்து வலியுறுத்துகின்றார்கள். அகப் புறப்பற்றுக்களை ஒழித்து, அறம் மறங்களுக் கப்பாற் சென்று, அன்பு இன்புகளால் தூண்டப்பட்டு எஞ்ஞான்றும் பிறர்க்கு ஹிதம் செய்து வருகிறார்கள்.

ஒளியுங் கருணையுஞ் சக்தியும் திரண்டுருண்ட வடிவமாம் கடவுள்.

மலினம் மலியப்பெற்ற திரைகளைக் களைந்தபின்னேதான் உள்ளொளி வெளியாகும்.

மானுடச் சுவபாவமானது அகத்தை அநுசரித்து எப்பொழுதும் வளர்ந்துகொண்டேயிருக்கும் ஜீவனாகும்; பிறர் இஷ்டப்படி வளர்த்தி ஆட்டப்படும் களிமண் உருண்டையன்று.

நம்முள்ளத்தின் பேரொளி புத்தியின் வாயிலாக வெளிப்படும்பொழுது அது வித்தகம் எனப்படுகின்றது; அதுவே இச்சாசக்தியைக் கிளர்த்தி மூட்டுகையில் வீரியமாக எழுகின்றது; இதயத்தினின்று ததும்பும்பொழுது அருளாகத் திகழ்கின்றது; இவ்வாறு நம்முள் முழுமாற்றம் நிகழும்பொழுது, அற்ப மானுடக் குழவிகளாகிய நாம் தெய்வமக்களாக உயர்கின்றோம்.

புனர்ஜனனத்தினாற்றான் புனிதமடைந்து முக்தி எய்துதற் கியலும்.

சத்தைப் பற்றிய ஞானத்தின் மகத்வம் யாதெனின், சிறுதொழில், குறுகிய அறிவு, இழிந்த சிந்தை, அற்பவிஷயங்கள், அநித்திய சாதனங்கள் முதலானவைகளினின்று நம்மை விடுவித்தற்கான திறனுடைமையே யாம்; புலன்களை மயக்கி மனத்தைத் திகைப்புறச் செய்வதன்று; மற்று, உள்ளும் புறமும் சுத்தி செய்து மாற்றிச் சுகிர்தம் பெற உதவுவது.

நம்முடைய சொல்செயல்களின் தன்மை நம் உள்ளமைப்பிற்குத் தக்கவாறு வெளியாகின்றதல்லாமல் பாவனைகளின்படி வெளி ஆவதில்லை.

முற்றறிவும்முதியஞானமும் ததும்பும்வரையிலும் நானாவித இன்னல் இடர்களுக்கும் கஷ்ட நிஷ்டூரங்களுக்கு மிலக்காகித் துடிக்கவேண்டி வரும்.

உலகில் தன்னையும், தன்னில் உலகையும் பார்த்து, சர்வத்தையும் பிணைத்துநிற்கும்மூலவஸ்துவில் இலயித்தற்காகத்தான் ஞான நூல்களும், இலளித வித்தைகளும், தர்மநெறிகளும், மதக் கொள்கைகளும் நிலவி வருகின்றன.

துர்ப்பலம் வெறுத்தற்குரியது, அபாயம் நிரம்பியது, பலசாலிகளின் பெருமையைக் களங்கப்படுத்துவதாகும்; மாந்தர்க்குள் ஒற்றுமையும் ஒழுங்கும் பெருகாதபடி தடுப்பதும்; வாழ்க்கை நலத்தைக் கெடுப்பதும் அதுவே.

முதலில், புலச்சேஷ்டைகளை ஒருவன் அடக்கவேண்டும்; பிறகு, அவித்தையாகிய தலைப்பாகை யணிந்து, பேராவல் அசூயைகளாகிய குண்டலங்களை இரு காதுகளிலும் தொங்கவிட்டு, மடி உறக்கம் பாபங்களாகிய தண்டுகளைத் தாங்கி, கோபமாகிய நாண் பூட்டப்பெற்ற காமம் என்ற வில்லைக் கையிற் பிடித்துப் பிரம்மலோகத்துட் செலுத்தும் பாதையில் குறுக்கே நின்று மருட்சியாகிய அம்பை எறிந்து மேற்போகவொட்டாது தடுக்கும் அகங்காரன் என்ற அரக்கனை வீரியம் என்ற நாண் பூட்டப்பெற்ற ஞானமாகிய வில்லில் அருளாகிய அம்பைத் தொடுத்து எய்து முறித்து வீழ்த்தவேண்டும். பின், ஓம் என்ற படகைக் கொண்டு ஜீவான்மா சிதாகாசத்துட் புகுந்தவுடன் பிரம்மவொளி சிறிது புலப்படும்; அவ்வொளியைப் பற்றி, அரும்பெரும் பொக்கிஷங்களடங்கிய சுரங்கத்துட் செல்பவனைப் போல், மெய்க்குருவின் உபதேசத்தைக் கொண்டு மிக்க கவனத்துடன் மேற்போகவே பிரம்மலோகத்தை அது யடைகின்றது. இதற்கப்பாலுள்ளது, போதமாய் ஆதிநடு வந்தமில்லாததாய், புனிதமாய், அவிகாரமாய், போக்குவரவுகள் அற்றதாய், இன்பமாய்த் திகழும் பூரணமான பரமாத்மாவாம். இப்பரமாத்மாவைத் தரிசித்த புண்ணிய புருஷன் மானுட வாழ்க்கையாகிய உருளை கடுவிசையுடன் சுழன்றுகொண்டிருப்பதைப் பார்க்கின்றான்; பார்த்து, அக் கடுஞ்சுழற்சியை இச்சாசக்தியினால் நிறுத்தக் கூடுமென்ற உண்மையை உணர்கின்றான்.

# நம்மாழ்வார் வைபவம்

## திருவாய்மொழி

[446-வது பக்கத் தொடர்ச்சி]

5-ம் பத்து 3-ம் தசகம்

1-ம் பாசுரம்

மாசறு சோதியென் செய்பவாய் மணிக்குன் றத்தை
ஆசறு சீலனை யாதி மூர்த்தியை நாடியே
பாசற வெய்தி யறிவ ழிந்தெனை நாளையம்
மேசறு மூரவர் கவ்வை தோழி யென்செய்யுமே.

அவதாரிகை:-எம்பெருமானது ஆச்ரிதவாத்ஸல்லியம்போன்ற அநவதிக கல்யாண குணங்களிலும் அவனது திவ்விய ஸௌந்தரியத்திலும் ஈடுபட்டு அவனோடு கலவை ஏற்படாமலிருக்கின்ற ஒரு பிராட்டி அவனை விட்டு நீங்கியிருப்பதைப் பொறுக்காமல் தன் தோழியை நோக்கி இப்பாசுரம் கூறுகின்றாள்.

உரை:—மாசு அறுசோதி-கொஞ்சங்கூடக் குறைவில்லாத ஜோதியை உடைய, என் - எனக்கு அருமையான, செய்ய வாய் மணிக்குன்றத்தை - சிவந்த அதரங்களையும் மணிபோன்ற நிறமுடைய உருவம் வாய்ந்தவனும், ஆசு அறுசீலனை - குற்றமற்ற சீலமுடையவனும், ஆதி மூர்த்தியை - ஆதிமூர்த்தியாகி இருப்பவனும் ஆகிய எம்பெருமானை, நாடியே - விரும்பித் தேடியே, பாசு - ஆசையை, அற - முழுவதும், எய்தி - அடைந்து, அறிவு அழிந்து - சுவய அறிவு போய், எனை நாளை - எத்தனை நாள் ஆகிவிட்டது, ஏசறும் ஊரவர் - குற்றம் பாராட்டுகிற சாதாரண உலக ஜனங்கள், கவ்வை - நம்மைத் தூற்றுகிற அபவாத வார்த்தைகள் (அதாவது, நாம் பெண்பிள்ளையாயிருந்தும் நாயகனை யடைய மடலூர உத்தேசித்திருக்கிறோம்; இது ஒருவரும் யத்தனிக்காத புதுமை. இதுவும் நியாயமோவென்ற அபவாதம்) என்செய்யுமே - நம்மை (அதாவது என்னையும் தோழியாகிய உன்னையும்) என்ன செய்யப்போகிறது. நாம் பூரண அறிவுடனிருந்தால் நியாயாந்நியாய விவேகத்தால் செய்யாதன செய்யத் துணியமாட்டோம். இப்படிச் சொல்

கிற இந்த உலகத்தாரோ எம்பெருமான் விஷயத்தில் பக்தியுடையராய் அவனது உத்கிருஷ்ட குணங்களை அறியாதவர். ஆகவே இவ்விரண்டாலும் ஏற்படும் அபவாதம் காரியகாரி ஆகாது. தோழியே, நீ அவன் குணங்களை அறிந்தவள். நாம் அவனைவிட்டுக் கலவை நீங்கி எத்தனை காலம் பாதைப்பட்டோம், படுகிறோம். ஆகையால் நீ ஊரவர் கவ்வையைக்கொண்டு என்னை இடித்துக் கூறவேண்டா.

---

2-ம் பாசுரம்

என்செய்யு மூரவர் கவ்வை
தோழியினி நம்மை
யென் செய்யத் தாமரைக் கண்ண
னென்னைநிறை கொண்டான்
முன்செய்ய மாமை யிழந்து
மேனிமெலி வெய்தி
என்செய்ய வாயும் கருங்கண்
ணும்பயப் பூர்ந்தவே.

பதக்குறிப்புக்கள்:—என்னை நிறைகொண்டான் - என் பெண்தன்மைக்குரிய நாணத்தைப் பூரணமாகப் பறித்துக்கொண்டான், மாமை - சோபை, பயப்பு - தேமல் போன்ற விவர்ணம் - சோபைக் குறைவு.

பொழிப்புரை:—எம்பெருமான் தன்னுடைய அதி சீதளமாயும், ஸர்வ ஸத்வ மனோஹரமாயும், சூரியோதயத்தில்பூத்த தாமரைப்பூவைப் போன்றதாயும் உள்ள கண்களைக் காட்டிக்காட்டி என்னைத் தோற்பித்துப்போனான்; அவனது கலவையைப்பெருமையாலே முன்னிருந்த சோபையானது மழுங்கி என்மேனி மெலிவெய்திற்று. அவனது கலவையின் ரஸத்தாலே புதுக்கணித்த என் செவ்வாயும் கருங்கண்ணும் பயப்பூர்ந்தன. இனி நம்மை ஊரார் கவ்வை என்ன செய்ய இருக்கிறது.

குறிப்பு:—சென்ற பாசுரத்தில், "ஊரார் கவ்வைக் கூற்று பாதிக்கும் ஆதலால் மடலூர வொண்ணாது" என்ற தோழிக்கு இரண்டு காரணங்கள் கூறி நிவர்த்திப்பித்தாள். இப்பாசுரத்தில் அவளையும் கூட்டிக்கொண்டு "உன்னையும் என்னையும் இந்தக் கவ்வை இனி என்ன கெடுக்க இருக்கிறது" என்கிறாள்.

---

3-ம் பாசுரம்

ஊர்ந்த சகட முதைத்த
பாதத்தன் பேய்முலை
சார்ந்து சுவைத்த செவ்வாய
னென்னைநிறை கொண்டான்
பேர்ந்தும் பெயர்ந்து மவனோ
டன்றியோர் சொல்லிலேன்
தீர்ந்தவென் தோழி யென்செய்யு
மூரவர் கவ்வையே.

அவதாரிகை:—பெண்கள் மடலூர்தல் நேரிதன்று என்று தோழி பின்னும் வற்புறுத்த, இப்பாசுரம் அவளுக்குப் பதில் உரைப்பதாகக் கொள்ளவேண்டும். இல்லையெனில் முன் பாசுரத்துடன் புனருக்தியாகும். மேலும், தன் மாமையையும் கண்கள் பயப்பையும் பற்றிக் கூறுதல் உசிதமாகாது.

பொழிப்புரை:—எம்பெருமான், தன் பாதங்களின் அழகாலும் சிவந்த வாயின் ஸௌந்தரியத்தாலும் என்னை முற்றும் அவன்வசம் வீடின்றிக் கவர்ந்து கொண்டான். அவன் உடன் இருக்கும்போதும், விட்டுப் பெயர்ந்திருக்கின்ற இந்த நிலையிலும் அவனைப் பற்றி அல்லது வேறு வார்த்தைக்கு என் செவி இடங்கொடாது; ஈதறிந்தும் எனக்குமுன் ஊரவர் தூற்றும் கவ்வையை அநாதரிக்கத் தயாராயிருக்கவேண்டிய நீ திரும்பியும் அக்கவ்வையைக் குறித்து ஏன் சொல்ல வேண்டும். என்னையும் உன்னையும் அது ஒன்றும் நிர்ப்பந்திக்க ஒண்ணாது.

---

4-ம் பாசுரம்

ஊரவர் கவ்வை யெருவிட்
டன்னைசொன் னீர்படுத்
தீரநெல் வித்தி முளைத்த
நெஞ்சப்பெருஞ் செய்யுட்
பேரமர் காதல் கடல்
புரைய விளைவித்த
காரமர் மேனிநங் கண்ணன்
தோழி கடியனே.

அவதாரிகை:—தோழீ, நீ ஊரவர் ஏசும் சொற்கள் பாராட்டத் தக்கனவல்லவென்றாய்! நற்றாய் செவிலித்தாய்மார்கள் உரைக்கும் புத்திமதிகளை அநுசரிக்க வேண்டாவா என்ன? அவர்கள் அடிக்கடி கடிந்து, நீ எம்பெருமான் திறத்தல் படுதல் அயுக்தம் அது நிறைவேறும் காரியம் அன்று என்று கூறுதல் அவனிடத்திலுள்ள என் ஆசையாகிய காமப்பயிரை வளர்க்கிற நல்ல நீராகி நாளுக்குநாள் முளையை வளர்த்து ஓங்கும் பயிராக்குகிறது. இப்பயிருக்கு முதலில் எருவிட்டது ஊரவர் ஏசலே; எம்பெருமானிடத்தில் எனக்குள்ள சங்கமே வித்து ஆயிற்று - ஆனால் இத்துணைகள் அப்பெருங் காதற்பயிரை விளைக்க உதவினாலும், ஆகாயத்திலிருந்து பெய்யும் மழை இல்லாவிடில் பயிர் வளராததுபோல் ஸ்ரீ கிருஷ்ணபகவான் நீருண்ட மேகம்போல் என் காமமாகிற சிறிய விதைகளைக் "கடல்புரைய" (அதாவது சமுத்திரம் போல் விசாலமாயும் அகாதமாயும்) வளர்த்திராவிடில் பயன்கண்டிரேன். இவ்வளவும் சேர்ந்து ஆக்கின என் நிலைமையை ஸ்ரீ கிருஷ்ணபகவான் சுமதலையாக ஏசிக் கூறும் ஊரவர் கடுமையான வார்த்தைகளை நான் ஸஹிக்கமாட்டேன்.

பதக் குறிப்புக்கள்:—நெஞ்சப் பெரும் செய்யுள் - என் நெஞ்சமாகிய பெரிய நெல் விளையும் நஞ்சை நிலத்தில்; நங்கண்ணன் - ஸ்ரீ கிருஷ்ணன் என்றால் எல்லாக் கோபிமார்களுக்கும் சுலபர் அல்லரோ என்று "நம்" என்ற பிரயோகத்துக்குப் பொருளும் கூறியாயிற்று.

---

5-ம் பாசுரம்

கடியன் கொடிய னெடியமா லுலகங் கொண்ட
அடிய னறிவரு மேனி மாயத்த னாகிலுங்
கொடியவென் னெஞ்ச மவனென்றேகிடக்குமெல்லே
துடிகொள்ளிடைமடத்தோழியன்னையென்செய்யுமே

குறிப்பு:—ஊரவர் ஏசலைப்பற்றிக் கவனிக்கவேண்டா என்ற பிராட்டி, அன்னைமார் சொற்களும் பாராட்டத்தக்கனவல்லவென்று இப்பாசுரத்தில்வாதிக்கிறாள். ஏனெனில், அவர்கள் கூற்று-பகவானிடத்தில் சென்றுபோன என் மனதைத் திருப்பவல்லனவல்லவென்கிறாள்.



பதக்குறிப்புக்கள்:-கடியன்-கடின சித்தமுள்ளவன், பெண் என்று இரங்காதவன்-வைகுண்டத்தில் வசிப்பவன், கொடியன் - கொடியசுபாவ முள்ளவன், நெடியமால் உலகங்கொண்ட அடியன் - வாமனனுடைய சிற்றடியைக் காட்டித் திருவிக்ரம அவதாரத்தில் தன் பேரடியால் உலகங்களை அளந்து மோசம் செய்தவன், கொடிய - தீவினையிலகப்பட்ட, அறிவருமேனி - ஒருவராலும் உள்ளபடி அறியக் கூடாத சோபை யுடைய திருமேனியை உடையவன், மாயத்தன் - ஆச்சரியமான ரூபத்தை எடுப்பவன், துடிகொள் இடை தோழி - துடிபோன்ற இடையையுடைய தோழி, அன்னை - தாய்மார்தாம் இப்படி நிச்சயத்துள்போன என்னை என்ன செய்யக்கூடும்.

6-ம் பாசுரம்

அன்னையென் செய்யிலெ னூரென் சொல்லிலென்றோ
ரென்னை யினியுமக் காசை யில்லை யகப்படேன் [ழிமீ
முன்னை யமரர் முதல்வன் வண்டுவ ராபதி
மன்னன் மணிவண்ணன் வாசு தேவன் வலையுளே.

உரை:—ஏற்கனவே நித்தியசூரிகளுக்கு நிர்வாஹகனை வைகுண்டப்பெருமான் தற்காலம் வாசுதேவனுடைய கிரஹத்தில் ஸ்ரீ கிருஷ்ணனாய் அவதரித்தவன் வீசிய வலையுள் நான் அகப்பட்டுக்கொண்டேன். மீள்வில்லை. அன்னைமார்கள் என் செய்தால் என்: ஊரவர் என்ன சொன்னாலென்ன: இனி உங்களுக்குத் தோழியாய்ப் பழகுவேனென்று ஆசைப்படவேண்டா. எம்பெருமான் திறத்தே இறந்துபடுபவள் ஆய்விட்டேன்

---

# யாப்பிலக்கணம்

[450-வது பக்கத் தொடர்ச்சி]

பாவினம்

துறை

1. வெண்சேந்துறையும் வேண்டுறையும்

மூந்திய இரண்டிதழ்களில் பாவினத்துள் ஒன்றாகிய தாழிசையின் இலக்கணத்தைக் கற்றோம். இனித் துறையின் இலக்கணத்தைக் கற்போம்:

துறை என்னும் பாவினம் வெண்சேந்துறை அல்லது குறள் வெண்சேந்துறை, வேண்டுறை, ஆசிரியத்துறை, கலித்துறை, வஞ்சித்துறை என வழங்கப்படும்.

1. (a) வெண் சேந்துறை அல்லது குறள் வெண் சேந்துறை:—இஃது எச்சீராலும், எத்தளையாலும், எவ்வடியாலும் தம்முள் அளவு ஒத்த இரண்டடிகளைப் பெற்று வரும். இது சேந்துறை வெள்ளை எனவும் வழங்கப்படும். இது குறள்வெண்பாவிற் கினமாம்.

வெண்சேந்துறை

"ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை."

"கோன்றை வேய்ந்தான் செல்வ னடியிணை
என்று மேத்தித் தொழுவோ மியாமே."

"நண்பருற வினர்கணமை நாடியுற வாடல் [ணுய்;
நறுநெயுறு குடத்தெறும்பு நண்ணலென எண்
பெண்களகக் காதலெலாம் பேசுமுயற் கொம்பே
பெருங்கபட மிடுகலனே பிறங்குமவ ருடலம்."

குருவாய் வந்தெங் குற்றங் கடிந்த
உருவோ னுள்ளடி யுன்னுது மினிதே.

(இவை தம்முள் அளவொத்த ஈரடிகளால் அமைந்திருத்தலறிக.)

1. (b) வேண்டுறை:—மூன்றடி முதலாக ஏழடி வரையிலுங் கொண்டு, இறுதியில் உள்ள ஓரடியும் பலவடியும் ஒரு சீரும் இரு சீரும் பல சீருங் குறைந்து வர அமைவது வேண்டுறை எனப்படும். இஃது ஓரோலி வேண்டுறை எனவும், வேற்றோலி வேண்டுறை எனவும் இருவகைப்படும். இவற்றுள் எல்லா அடிகளும் ஓரேவிதமான இசை பொருந்தி வருவது ஓரோலி வேண்டுறை எனப்படும்; முதலிலுள்ள அடி ஓரிசையாகவும் பின்னுள்ள அடி மற்றோரிசையாகவும் பொருந்தி வருவது வேற்றோலி வேண்டுறை எனப்படும். இவற்றுள் மூன்றடியால் வருவதைச் சிந்தியல் வெண்பாவிற்கும், நாலடியால் வருவதை நேரிசை இன்னிசை வெண்பாக்களுக்கும், ஐந்தடி முதல் ஏழடி காறும் வருவனவற்றைப் பஃறொடை வெண்பாவுக்கும் இனமாகக் கொள்க.

வரலாறு

"தாளாள ரல்லாதார் தாம்பல ராயக்கா
லென்னா மென்னும்
யாளியைக் கண்டஞ்சி யானைதன் கோடிரண்டும்
பீலிபோற் சாய்த்துவிடும் பிலிற்றி யாங்கே."

(இது மூன்றடியாய் ஈற்றடி இரண்டும் இரு சீர் குறைந்து வந்த ஓரோலி வேண்டுறை.)

"குழலிசைய வண்டினங்கள் கோழிலைய
செங்காந்தட் குலைமேற் பாய
அழலெரியின் மூழ்கினவா லந்தோ
அளியவென் றயல்வாழ் மந்தி
கலுழ்வனபோ னெஞ்சசைந்து கல்லருவி தூஉம்
நிழல்வரை நன்னாடன் நீப்பனோ அல்லன்."

(இது நான்கடியாய் ஈற்றடி இரண்டும் இரு சீர் குறைந்து வந்த ஓரோலி வேண்டுறை.)

"வெறியுறு கமழ்கண்ணி வேந்தர்கட் காயினும்
உறவுற வருவன உரைப்பன் உரைப்பன்மற்
செறிவுறு தொழிலினர் சிறந்தவர் இவர்நமக்
கறிவுறு தொழிலரென் றல்லவை சொல்லன்மின்
பிறபிற நிகழ்வன பின்.

(இஃது ஐந்தடியாய் ஈற்றடி ஒரு சீர் குறைந்து வந்த ஓரோலி வேண்டுறை.)

"கல்லாதார் நல்லவையுட் கல்லேபோற்
சென்றிருந்தாற் கருமம் யாதாம்?
இல்லாதார் செல்வரைக்கண் டிணங்கியே
ஏமுற்றால் இயைவ தென்னாம்?
பொல்லாதார் நன்கலனை மெய்புதைப்பப்
பூண்டாலும் பொலிவ தென்னாம்?
புல்லாதார் பொய்க்கேண்மை
புனைந்துரைத்தா லாவதென்னே?

அல்லாதார் பொய்யாவ
தறிபவேல் அமையாதோ?"

(இஃது ஐந்தடியாய் ஈற்றடி இரண்டும் இரண்டு சீர் குறைந்து வந்த வேற்றொலி வெண்டுறை.)

"முழங்கு களியானை மூரிக் கடற்படை
முறிதார் மன்னர்
வழங்கு மிடமெல்லாந் தன்புகழே போக்கிய
வைவேல் விண்ணன்
செழுந்தண்பூம் பழசையுட்
சிறந்ததுநா ளுஞ்செய
எழுந்த சேதிகத் துள்ளிருந்த அண்ணலடி
விழுந்தண்பூ மலர்களால் வியந்துநா ளுந்தொழத்
தொடர்ந்துநின் றவ்வினை துறந்துபோ மாலரோ"

(இஃது ஆறடியாய், முதலடி இரண்டும் அறுசீராய், பின் நான்கடியும் நாற்சீராய், முதலிரண்டடியும் ஓர் இசையாய், பின் நான்கடியும் மற்றோரிசையாய் வந்த வேற்றொலி வெண்டுறை.)

"முழங்குதிரைக் கொற்கைவேந்தன் முழுதலகு
மேவல்செய முறைசெய் கோமான்
வழங்குதிறல் வாண்மாறன் மாச்செழியன்
தாக்கரிய வைவேல் பாடிக்
கலங்கிநின் றூரெலாங் கருதலா காவணம்
இலங்குவா ளிரண்டினு லிருகைவீ சிப்பெயர்ந்
தலங்கன்மா லைபவிழ்ந் நாடவா டேம்மிவள்
பொலங்கொள்பூந் தடங்கட்கே புரிந்துநின்
[றூரெலாம்
விலங்கியுள் ளந்தப விளிந்துவே றுடலே." 6.

(இஃது ஏழடியாய், முதலிரண்டடியும் அறுசீராய் ஓரோசையாய், பின் ஐந்தடியும், நாற்சீராய் வேறோர் ஓசையாய் வந்த வேற்றொலி வெண்டுறை.)

குறிப்பு:—அடிகள் ஒரொலி பொருந்தியும் வேற்றொலி பொருந்தியும் வருவதை உச்சரித்துக் கண்டுகொள்க.

செப்பலோசையிற் சிறிது வேறுபட்டு வந்த நேரிசை வெண்பாவையும் இன்னிசை வெண்பாவையும் ஒரு புடை ஒப்புமைநோக்கி வெண்டுறைப் பாற் படுத்தி வழங்கினும் இழுக்காகாது.

வெண்டுறை

(a) "இதுவோ திருவர சிதுவோ மணங்கொல்லை
இதுவோ எழிலாலி என்னுமூர்–இதுவோதான்
வெட்டுங் கலியன்வேல் வெட்டி நெடுமாலே
எட்டெழுத்தும் பறித்த இடம்."

(இது நேரிசை வெண்பாவே போல நின்று, செப்பலோசையின் வேறுபட்டு வந்த வெண்டுறை.)

(b) "அம்ம் பவள்வரி நெடுங்க ணுப்வஞ்சிக்
கொம்ம் பவள்கொடி மருங்குல் கோங்கின்
அரும்ம் பவண்முலை ஒக்குமே ஒக்கும்
கரும்ம் பவள்வாயிற் சொல்."

(இஃது இன்னிசை வெண்பாவே போல நின்று, செப்பலோசையின் வேறுபட்டு வந்த வெண்டுறை.)

# காற்று மழை

## Shakespeare—"The Tempest"

அங்கம் 2. களம் 1.

[445-வது பக்கத் தொடர்ச்சி]

அலான்ஸோ:—இல்லை, இல்லை! அவன் போய்விட்டான் (1).

ஸபஸ்ட்டியன்:—ஐயனே, நம் ஐரோப்பாவிற்கு அருள்வதனினும் நின் புதல்வியை ஓர் ஆப்பரிக்கனுக்குத் துறக்க இசைந்த நீ இப் பேரிழவு அடைந்ததற்கு உனக்கே நன்றிசெலுத்திக்கொள்ளலாம் (2); அது பற்றிய துயரினை நனைக்கக் காரணமுடைய நின் கண்களினின்றும் அவள் அவ்வயின் நாடேனுங் கடத்தப்பட்டுளள் (3).

அலான்ஸோ:—வேண்டிக்கொள்கின்றேன், சும்மாவிரு.

ஸபஸ்ட்டியன்:—நாங்க ளனைவரும், மாறாக உன்னை வணங்கி மன்றாடினோம். (4). அழகுடைய ஆன்மா அவளுமே, எக்கோடியில் கோல் குனிதல் வேண்டுமெனத் தன் அருவருப்பிற்கும் நின் ஆணைக் கடங்குதற்கு மிடையே நிறுத்தனள் (5). நின் மகனை இழந்தேவிட்டோம் என அஞ்சுகின்றேன். ஆற்றுதற்கு நாம் கொணரும் ஆடவர்களினும் அதிக விதவைகளை, மிலானும் நேப்ல்ஸும், இந்தக் காரியச் செய்கையால் பெற்றன (6). குற்றம் நின்னதே.

அலான்ஸோ:—அரிதினு மரிய இவ்விழவும் அன்னதே (7)

(1) பர்டினண்ட் நீந்திக் கரையேற நான் கண்டேன், என்றுரைத்த ப்ரான்ஸிஸ்கோவை அரசன் மறுத்துரைப்பது இது.

(2) உன்மகன் இறந்தானென்றால், அவ்விழவிற்கு நீதானே காரணம். ஐரோப்பாவிலுள்ள அரசருக்குக் கொடுக்காமல், ஆப்பிரிக்காவிலுள்ள ஒருவனுக்குக் கொண்டுபோய் உன் மகளை மணஞ்செய்து அளித்தாய். அதனாற்றானே உன்மகனை இழக்க நேர்ந்தது—என்பது பொருள்.

(3) துயரினை நனைக்கக் காரணமுடைய கண்—என்பது, துயரினால் நீர் வடிக்கவேண்டிய கண், எனப்பொருள்படுதல் வேண்டும். அவ்வயின்=அவ்விடத்தில், ஆப்ரிக்காவில். மகனை யிழந்தாய், மகளையோ கண்காணாத் தேயத்திலே துறந்து இழந்தாய் - என்பது பொருள்.

(4) மாறாக=ஆப்பரிக்கனுக்கு அவளைக் கலியாணஞ் செய்து கொடுப்பதற்கு மாறாக.

(5) அழகுடைய ஆன்மா=க்ளாரிபெல். கோல்=துலாக் கோல். க்ளாரிபெல், அந்த ஆப்ரிக்கனை மணக்க வெறுத்தனள், உன் ஆணையைக் கடக்கவும் அஞ்சினள். இவ்வண்ணம், அவனை மணக்க மறுப்பதோ அல்லது உன் சொல்லை மறுப்பதோ என்று இரண்டையும் நிறுத்து நிறுத்து, இறுதியில்தான் உனக்கு அடங்க உடன்பட்டாளேயன்றி, மனம் உவந்து அவனை மணக்க விரும்பினள் அல்லள்—என்பது பொருள்.

(6) நம்மோடு இருந்தவர்களிற் பலர் நாம் மேற்கொண்ட இந்தக் கல்லியாண காரியத்தினின்று திரும்புகையில் மாண்டனர். ஆதலின், மிலானிலும் நேப்ல்ஸிலும் இப்பொழுது விதவைகள் அதிகமாயதே இதன் பயன் ஆயிற்று. பிழைத்து நம்முடன் திரும்ப இருப்பவர்களின் தொகையிலும் இறந்துபோனவர் தொகையே அதிகம் - என்பது பொருள்.

(7) "குற்றம் என்னுடையதாயின், அதனால் நேர்ந்த இப் புத்திரநஷ்டமும் எனக்குத்தானே, உங்களுக்கில்லையே; சும்மா விருங்கள்.—என வருத்தமும் சலிப்பும் தோன்றச் சொல்கின்றான்.



கன்ஸாலோ:—என் தலைவ, ஸபஸ்ட்டியன்! நீ பேசும் இவ்வுண்மை மென்மையும், புகுத்திப் பேசுதற்குரியசெவ்வியுஞ் சிறிது குறைந்திருக்கின்றது. எண்ணெய் கொணரவேண்டிய இவ்வேளையில் நீ புண்ணைக் கிளர்கின்றாய் (8).

ஸபஸ்ட்டியன்:—நன்று (9).

அன்டோனியோ:—இரணவைத்திய முறை சாலப் புகன்றாய். (10).

கன்ஸாலோ:—ஐயனே, நல்லோய், நீ மேகம் படர்ந்திருந்தால் அக்காலம் எமக்கெல்லாம் அருவருக்கும் அழுக்குடைய பருவங்கள் ஆகின்றது (11).

ஸபஸ்ட்டியன்:—அழுக்குடைய பருவமா? (12).

அன்டோனியோ:—மிகவும் அழுக்குடையது (13).

கன்ஸாலோ:—இத் தீவினிற் குடிசெய்யுங் கருமம் என் கை இருக்குமாயின், தலைவ....(14).

அன்டோனியோ:—கள்ளியும் முள்ளியும் விதைப்பான். (15)

ஸபஸ்ட்டியன்:-அல்லது, பிரண்டையும் எருக்கும். (16)

கன்ஸாலோ:—இந்த இராச்சியத்தில் நான் எல்லாவற்றையும் எதிர்மாறாகச் செய்தமைப்பேன்; எவ்வகைப் போக்குவரவிற்கும் இடங்கொடேன். நியாயாதிபதி என்ற பேர்தானுமிருக்காது. கடிதங்கள் காணமாட்டா. செல்வமும் வறுமையும், கூலிக்கு வேலைகொள்வதும், ஒன்றுமில்லை. ஒப்பந்தம் வார்சுரிமை, ஒத்தி, சுத்தக்கிரயம், செக்குபந்தி கட்டுக்கோப்பு, மாவடை மரவடை, சலநிதி பாஷாணம்–ஒன்றுமில்லை. உலோகங்கள் தானியங்கள் அல்லது மதுவகை, எண்ணெய் ஒன்றிற்கும் உபயோகமில்லை; தொழில் ஒன்றுமில்லை; மனிதர் அனைவரும் சும்மா விருக்கவேண்டும்—எல்லாரும்—மாதருங்கூட; ஆயினும் அவர் பழியில்லாத் தூய்மையுடனிருப்பார். ஆட்சி இல்லை—(18).

ஸபஸ்ட்டியன்:—எனினும், இதற்கு அவன் அரசனாகி யிருப்பானும். (19)

அன்டோனியோ:—இவனது குடியரசின் பின்வரு முடிவு, துவக்கிய முதலை மறக்கின்றது. (20)

கன்ஸாலோ:—வியர்வையும் வருத்தமும் இன்றியே எல்லாப் பொருள்களையும் அனைவர்க்கும் பொதுவாக இப் பிரகிருதி உண்டாக்கித் தருதல்வேண்டும்: வஞ்சனை, கொள்ளை, வாள் வேல் கத்தி துப்பாக்கி எந்திரங்களுக்கு அவசியமோ நான் அமைக்கமாட்டேன். மற்று, இயற்கையானது, தன்னின்றுதானே எல்லாப் பொலிவும் நிறைவும் சுரந்து என்பழிபடா மக்களை ஊட்டுதல் வேண்டும். (21)

ஸபஸ்டியன்:—இவன் குடிகளுக்கிடையே கலியாணம் இல்லையோ?

அன்டோனியோ:—ஒன்றுமில்லை ஐயா; எல்லாரும் சோம்பேறி சும்மாவிருப்பவர்கள்—வேசையரும், விடர்களும். (22)

கன்ஸாலோ:—முன்னைய பொன்னின் காலத்தையும் விஞ்சும்படி, செவ்விதின் ஐயனே, யான் அரசு செய்வேன். (23)

ஸபஸ்ட்டியன்:—கோவே வாழ்க!

(8) செவ்வி - சமயம். நீ சொல்வது உண்மையாகலாம்; எனினும் புண்பட்ட அவன் மனத்தை ஆற்றுவதை விட்டு இப்பொழுதா இப்படிமேன்மேலும் துன்பம்செய்வது?—என்பது பொருள்.

(9), (10) 'நன்று சொல்லினாய்' என்று கன்ஸாலோவைப் பாராட்டுவதுபோல் ஸபஸ்ட்டியன் பரிகசிக்க, "இரண வைத்தியமுறைக் கிணங்கிப் பேசினமையால், இது சாலவும் நன்றாக இருக்கின்றதென்று, அன்டோனியோவும் சேர்ந்து கூறுகின்றான்.

(11) உன் முகத்தில் துன்பம் தோன்றினால் நாங்களெல்லாம் மிகக் கலங்கி அலைகின்றோம்—என்பது பொருள்.

(12), (13) 'அழுக்குடைய என்னும் அடைமொழி பருவத்திற்குப் பொருந்தாமை பற்றி ஸபஸ்ட்டியன் வியக்க, அதனையே அன்டோனியோ வற்புறுத்திப் பரிகசிக்கின்றான்.

(14)...என்று சில கூறி அரசன் தன் துயரை மறக்கும்படி செய்ய முயல்கின்றான் கன்ஸாலோ.

(14, 15, 16), 'குடிசெய்யும் கருமம்,' என்பதைக் கன்ஸாலோ, 'இதனைக் குடியேற்றி நாடாக்குதல்' என்னும் பொருளில் உபயோகப்படுத்தினனும் அன்டோனியோவும் ஸபஸ்ட்டியனும் அதனை, 'பயிர்செய்தல்' என்னும் பொருளில் கொண்டு, கள்ளியும் முள்ளியும் பிரண்டையும் எருக்கும் விதைப்பதன்றி இவன் வேறென்ன பயிர் செய்யப்போகின்றான்—என்று தமக்குள்ளே ஒருபுறமாய்ப் பரிகசித்துப் பேசுகின்றனர்.

(17) இவன் அரசனானால், இத்தீவில் கள் கிடைக்காதாகையால் அவனால் குடித்துக் கிடக்க இயலாது, அவ்வளவே—என்பது பொருள்.

(18) இத்தீவில் தான் ஓர் புதிய இராச்சியம் நிறுவி அதற்குத் தான் அரசனானால், மற்ற இராச்சியங்களில் நடைபெறுகின்றவைகளுக்கெல்லாம் மாறாக, வர்த்தகம் கைத்தொழில் சட்டம், 'சாஸனம்' முதலிய விவகாரங்கள் ஒன்றுமின்றி நடத்துவான் எனக் கன்ஸாலோ கூறுகின்றான்.

(19, 20) "இதற்கு அரசனுமாயின் யான் என்செய்வேன்" என்று துவக்கி, "ஆட்சி இல்லை" என்று முரண்படக் கன்ஸாலோ முடிப்பதால், இவ்வண்ணம் பரிகசிக்கின்றனர்.

எனினும், முரணும் இல்லை என்று ஒருவாறு உணரலாம். அரசன் என்றிருந்தால் அவன்தன் ஆட்சியைச் செலுத்துபவனாகத்தான் இருக்கவேண்டும் என்ற நியதி இல்லை. குடிகளைக் காக்கின்றதேயன்றி அதிகாரங்களைக் கைக்கொண்டு நடத்தி ஆள்வதன்று அரசன் தொழில். "நான் அரசனாக இருந்தால், தற்கால நாகரிகப்போக்கு வரவுகளை யெல்லாம் அறவே விலக்கி, ஆட்சி புரியவேண்டிய அவசியமும் இல்லாமற் செய்துவிடுவேன்" என்பது கன்ஸாலோவின் கருத்தாகலாம். மண்ணாசை பிடித்து ஆட்சிக்கு அவாவுகின்ற துரோகிகளாகிய ஸபஸ்ட்டியனும் அன்டோனியோவும் இக்கருத்தின் சிறப்பை எவ்வாறு உணர்வார். சிறந்த கருத்துக்கள் எல்லாவற்றையும் போல் இதுவும் இக்கயவர்களால் பரிகசிக்கப்பட்டது.

(21) கன்ஸாலோ, அலான்ஸோ தன் துயரத்தைச் சிறிது மறந்திருக்கும்படி, இவ்வண்ணம் ஓர் குடியரசு கற்பனை செய்து கூறுமிது விளையாட்டுப்போல் தோன்றினாலும், உண்மையில் இந்நினைவுகள் மிகவுயர்ந்த தத்துவங்களைத் தம்முள் அடக்கிக்கொண்டிருக்கின்றன என்பதைக் கருத்துக்கூர்ந்துணர்தல் நலம். கவிக்கரசு கம்பர் கோசல நாட்டு வாழ்க்கை இவ்வண்ணமே யாதும் முயற்சியும் வருத்தமும் இன்றி நடைபெறுகின்றதென்று குறித்திருக்கின்ற சிறப்பையும், தசரதன் அங்கு ஆள்வதின்றியே அரசு செய்கின்ற அருமையையும், இக் கலாநிலய இதழ்களில் (முதல் வால்யூம்) வரையப்பெற்றிருக்கின்ற கம்பராமாயணக் கட்டுரைகளிற் காணலாம்.

(22) இவர் கயவராதலால் அவனுரையை இவ்வண்ணம் இகழ்ந்து பரிகசிக்கின்றனர்.

(23) எல்லா நலங்களும் குறைவற அமைந்த காலத்தை நாம் திரேதாயுகம் என்பதுபோல் மேனாட்டார் 'பொன் காலம்' (Golden Age) என்று அழைப்பது மரபு.

(24) இவை பரிகச வாழ்த்து.

(25) நீ பொருளற்றவைகளைப் பேசுகின்றாயாதலின், அது ஒன்றும் பேசாததற்கே நிகர். இவ் வீண் வார்த்தைகளை நிறுத்[illegible] பொருள்.

அன்டோனியோ:—கன்ஸாலோ நெடிதூழ் வாழ்க! (24)

கன்ஸாலோ:—இன்னும், ஐயனே, யான் இயம்புவதைக் கேட்கின்றீரோ?

அலான்ஸோ:—போதும், இனிவேண்டா; நீ எனக்குப் பேசுவது ஒன்றுமில்லை. (25)

கன்ஸாலோ:—தலைவ, உன் உரையை நானும் நனி நம்புகின்றேன். ஒன்றற்குமின்றியே என்றும் சிரிக்கின்ற உணர்வுமிக்க நுண்ணிய ஈரலுடைய இப்பெருமக்களுக் கோர் செவ்வி யளிக்கவே யானிது செய்தெனென். (26)

அன்டோனியோ:-நாங்கள் சிரித்தது உன்னையே. (27)

கன்ஸாலோ:—களிப்புடைய இவ்வசட்டாட்டத்தில் உங்களுக்கு யான் ஒன்றுமில்லை. ஆதலின், இன்னமும் தொடர்ந்து நீங்கள் ஒன்றுமின்றியே சிரித்து மகிழலாம். (28)

அன்டோனியோ:—ஆஹா! என்ன அடி கிடைத்தது! (29)

ஸபஸ்ட்டியன்:—பக்கத்தால் அது பட்டிலதாயின் (30)

கன்ஸாலோ:—வீரச் செருக்குவாய்ந்த பெருமக்கள் நீங்கள். வாரமோ ரைந்துதான் மாறுமல் இருக்குமாயின் மதியினை அதன் மண்டலத்தினின் றுபெயர்த்துவிட வேண்டுவீர். (31)

[யாழினை இசைத்துக்கொண்டு ஏரியல், புலப்படாமல் வருகின்றான்]

ஸபஸ்ட்டியன்:—ஆம், அப்புறம் குருவிபிடிக்கப் போவோம். (32)

அன்டோனியோ:—வேண்டா, நல்லோய், வெகுளாதே. (33)

கன்ஸாலோ:—வெகுண்டிலேன், நிச்சயம். இத்துணை நொய்தின் என் பகுத்தறிவைச் செலுத்தத் துணியமாட்டேன் (34). நான் மிக்க மந்தமாயிருக்கின்றேன், நீங்கள் சிரித்துச்சிரித்து என்னைத் தூங்கச் செய்வீர்களோ? (35)

அன்டோனியோ:—போய்த் தூங்கியவாங்கே நாங்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டிரு. (36)

[அலான்ஸோவையும், ஸபஸ்ட்டியனையும், அன்டோனியோவையும் தவிர, மற்றவரனைவரும் துயின்றுவிடுகின்றனர்]

(26) "நான் பேசுவது ஒன்றுமில்லை என்பதை நானும் ஒவ்வுகின்றேன்" என்று அரசனோடு சேர்ந்துகொள்கின்றான் கன்ஸாலோ. சேர்ந்துகொண்டு, அன்டோனியோவையும் ஸபஸ்ட்டியனையும் குறித்து, "ஒரு காரணமும் இன்றியே எப்பொழுதும் சிரித்துக்கொண்டிருக்கின்ற பித்தர்கள்போன்ற இவர் சிரிப்பதற்கு ஓர்நிபம் ஆகும்படி, நான் ஒன்றுமில்லாதவைகளைச் சொல்லிக்கொண்டிருந்தேன், கண்டாய்" என்று, தன்னைப் பரிகசித்துக் கொண்டிருந்த அவ்விருவரும் திடுக்கிடும்படி பரிகசத்தை அவர்களுக்கே திருப்பிவிடுகின்றான்.

(27) "நாங்கள் ஒன்றும் இன்றிச் சிரித்துக்கொண்டிருந்தவர்கள் அல்லர். உன்னை இகழ்ந்தே சிரித்தோம்" - என்று அன்டோனியோ அப்பரிகசத்தின் நிந்தனையைக் கன்ஸாலோமீது செலுத்துகின்றான்.

(28) வெறியர்போல் நீங்கள் சிரிக்கும் இந்த அசட்டு ஆட்டத் திறத்தில் உங்களை நோக்குங்கால் நான் ஒன்றுமில்லை என்றே சொல்லவேண்டும். ஆகையால், என்னைப் பார்த்து நீங்கள் சிரிக்கும்போது, ஒன்றுமில்லாததைக் குறித்தே சிரிக்கின்றீர் என்று கொள்வதே நேர்.—என இகழ்கின்றான் கன்ஸாலோ.

(29, 30.) "ஆகா, நாம் அவனை இகழ்ந்து சிரித்தோம் என்று எண்ணியிருக்க. கடைசியில் நம்மையே அவன் சிரித்திகழ்வதாக அடித்துவிட்டானே" என்று அன்டோனியோ சொல்ல, ஸபஸ்ட்டியன், "இது என்ன அடி இது, கத்தியின் கூர் படவில்லை. அதன் பக்கத்தால் அடிபட்டதுபோல் தட்டையாய் வீழ்ந்ததுகாண் இவன் வீண் பரிகசம்" எனக் கூறுகின்றான். கூறி இருவரும் மறுபடியும் சிரித்தனர்.

(31) அவர் சிரிப்பது கண்ட கன்ஸாலோ சிறிது சினம்தோன்ற "மகா வீரர்கள் நீங்கள்; உங்கள் இஷ்டப்படி மாறுமல் சந்திரன் தன் கதியில் செல்லுமாயின், நீங்கள் அந்தச் சந்திரனைக்கூடப் பெயர்த்து எறிந்துவிடுவீர்," எனக் கூறுகின்றான்.

(32) ஆம், சந்திரனைப் பெயர்த்தெறிந்துவிட்டு, அந்த இருளில், மரங்களிலுள்ள குருவிகளைப் பிடிக்கப் போனாலும் போவோம்; நீ என்ன கேட்பது - என ஸபஸ்ட்டியன் வெகுண்டு, பேசுகின்றான்.

(33) இருவருக்கும் கோபமுடைய வார்த்தைகள் வளர்வது கண்ட அன்டோனியோ, அவர்களைத் தணிக்கும்பொருட்டு, கன்ஸாலோவைப் பார்த்து, "வெகுளாதே" என்று வேண்டிக்கொள்கின்றான்.

(34) உங்களைப்போன்ற அசடர்மீது கோபங்கொள்வதே என் பகுத்தறிவிற்குக் குறைவாகும். ஆகையால், நான் கோபங்கொள்ளவில்லை—என்கின்றான்.

(35) எனக்குத் துயில் வருகின்றது. நீங்கள் உங்கள் வழக்கம்போல் சிரித்துக்கொண்டிருங்கள், நான் துயில்கின்றேன் - என்பது பொருள்.

(36) அலான்ஸோவுடன் பேசிக்கொண்டிருந்தவன் போலத் தோன்றி, நாங்கள் சொன்னவைகளையும் சிரித்ததையும் கவனித்துக்கொண்டிருந்த நீ, இப்பொழுது தூங்குபவன்போல் எங்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டிருக்கலாம்—என்பது பொருள்.

# கலித்தொகை

[454-வது பக்கத் தொடர்ச்சி]

### பாலைக் கலி 11

தலைமகனால் பிரிவு உணர்த்தப்பட்ட தோழி, காட்டின் கடுமையையும், தலைவியின் மென்மையையும், வாழ்நாளது சின்மையையும், இளமையின் அருமையையும், காமத்தின் மேன்மையையும், அவனுக்கு எடுத்துக் கூறி அவன் போக்கைத் தடுத்ததைக் கூறுவது இச்செய்யுள்.

இடுமு ணெடுவேலி போலக் கொலைவர்
கொடுமரந் தேய்த்தார் பதுக்கை நிரைத்த
கடுநவை யாராற் றறுசுனை முற்றி
யுடங்குநீர் வேட்ட வுடம்புயங் கியானை
கடுந்தாம் பதிபாங்குக் கைதெறப் பட்டு
வெறிநிரை வேறுகச் சார்ச்சார லோடி
நெறிமயக் குற்ற நிரம்பருநீ டத்தஞ்
சிறுநனி நீதுஞ்சி யேற்பினு மஞ்சு
நறுநுத னீத்துப் பொருள்வயிற் செல்வோ
யுரனுடை யுள்ளத்தை செய்பொருண் முற்றிய
வளமையா னாகும் பொருளிது வென்பா
யிளமையுங் காமமு நின்பாணி நில்லா
விடைமுலைக் கோதை குழைய முயங்கு
முறைநாள் கழிதலுறூஉமைக் காண்டை
கடைநா ளிதுவென் றறிந்தாரு மில்லை
போற்றாய் பெருமநீ காமம் புகர்பட
வேற்றுமைக் கொண்டு பொருள்வயிற் போகுவாய்
கூற்றமு மூப்பு மறந்தாரோ டோரா அங்கு
மாற்றுமைக் கொண்ட வழி.

(வரி. 1 - 19) இடு - இடப்பட்ட, முள் நெடு வேலி போல - முள்ளையுடைய நீண்ட வேலியைப்போல, கொலைவர் - கொலைத்தொழிலையுடைய வேடர், கொடுமரம் - வில்லாலே, தேய்த்தார் - கொல்லப்பட்டவருடைய, பதுக்கை நிரைத்த - (உடல்கள் மறையவிட்ட) கற்குவைகள் வரிசையாய்க் கிடக்கின்ற, கடு நவை ஆர் - கொடிய குற்றம் பொருந்திய, ஆறு - வழியில், அறு சுனை - நீர் (பெரிதும்) வற்றிய சுனையை, முற்றி - சூழ்ந்து, உடங்கு நீர் வேட்ட - ஒடுங்கிய நீரை விரும்பிய, உடம்பு உயங்கு யானை-உடம்பு வருந்துகின்ற யானைகள், கடுந் தாம் பதிபு- கடுமையான தாகத்தால் குனிந்து (கைநீட்ட), ஆங்கு கை தெறப்பட்டு - அவ்வொடுங்கிய நீரில் (அவைகளின்) கைகள் (வெம்மையால்) சுடப்பட்டு, வெறி நிரை வேறுக- அச்சங்கொண்ட அக்கூட்டங்கள் குலைந்து, சார் சாரல் ஓடி - மலைச்சாரல்தோறும் ஓடியதனால், நெறி மயக்கு உற்ற - பழைய வழிகள் மயங்குதலை யடைந்த, நிரம்பு அரு-(போகப்போகத்) தொலையாத, நீடு அத்தம் - நீண்ட காட்டிடத்தில்; நீ சிறு நனி துஞ்சி - நீ (விழித்துக்கொள்ளவேண்டிய காலத்தைக் கடந்து) சிறிது பொழுது அதிகமாக உறங்கி, ஏற்பினும் - விழித்துக்கொண்டாலும், அஞ்சும்-(இச்செயல் யாதோ ஒரு காரணத்தை உடையது என்று) அஞ்சும், நறுநுதல் நீத்து - வாசனை பொருந்திய நெற்றியையுடைய மனைவியைக் கைவிட்டு, பொருள் வயின் செல்வோய் - பொருள் தேடும்பொருட்டுச் செல்பவனே, உரன் உடை உள்ளத்தை - (நீ) வலிமையுள்ள உள்ளத்தை உடையவனாயிருக்கின்றாய், செய் பொருள் முற்றிய - தேட வேண்டிய பொருளைத் தேடி முடித்த, வளமையான் ஆகும் பொருள்-மிகுதியாலே உண்டாகும் பயனே, இது என்பாய் - இவ் வின்ப வாழ்க்கை என்று சொல்பவனே, இளமையும் காமமும் - இளமையும் காம இன்பமும், நின் பாணி நில்லா - நின் கைக்கு அடங்கி நில்லா, (அன்றியும்) கடை நாள் இது என்று-இறக்கும் நாள் இது என்று, அறிந்தாரும் இல்லை-உலகத்தில் அறிந்தவர்களும் இல்லை, (ஆதலால் நீ) முலை இடை கோதை குழைய - முலைகளின் இடையில் மலர் மாலை குழையும்படி, முயங்கு முறை நாள் - புணரும் முறைமையினையுடைய நாட்கள், கழிதல் உறூஉமை காண் - (இளமைப் பருவத்தே) கழிவடையாமல் பார்த்துக்கொள், காமம் புகர்பட - காமதர்மம் குற்றமுற, வேற்றுமை கொண்டு- அதனோடு பகைகொண்டு, பொருள்வயின் போகுவாய் - பொருளின்பொருட்டுச் செல்கின்றவனே, பெரும-பெரியோனே, நீ கூற்றமும் மூப்பும் மறந்தாரோடு - நீ (தமக்கு வரும்) இறப்பையும் கிழத்தன்மையையும் மறந்திருக்கின்ற அறிவில்லாதாருடனே, ஓராங்கு மாற்றுமை கொண்ட வழி - ஒரே விதமாய் மாறுபாடு கொண்ட பெரியோர் நிற்கின்ற வழியினை, போற்றாய்-அனுசரிப்பாயாக.

(பொழிப்புரை) இடப்பட்ட நீண்ட முள் வேலியைப்போலக் கொலைத்தொழிலையுடைய வேடரது வில்லாலே கொல்லப்பட்டாருடைய உடல்கள் மறையவிட்ட கற்குவைகள் வரிசையாய்க் கிடக்கின்ற கொடிய குற்றம் பொருந்திய வழியிலே, பெரிதும் நீர் வற்றிய சுனையைச் சூழ்ந்து ஒடுங்கிய நீரை விரும்பிய உடம்பு வருந்துகின்ற யானைகள், கடுமையான தாகத்தால் குனிந்து கைநீட்ட அவ்வொடுங்கிய நீரில் அவைகளின் கைகள் வெம்மையால் சுடப்பட்டு, அச்சங்கொண்ட அக்கூட்டங்கள் குலைந்து மலைச்சாரல்தோறும் ஓடியதனால் பழைய வழிகள் மயங்குதலை யடைந்த போகப்போகத் தொலையாத நீண்ட காட்டிலே—நீ விழித்துக்கொள்ள வேண்டிய காலத்தைக் கடந்து சிறிதுபொழுது அதிகமாக உறங்கி விழித்துக்கொண்டாலும், 'இச்செயல் யாதோ ஒரு காரணத்தையுடையது' என்று அஞ்சும் வாசனை பொருந்திய நெற்றியையுடைய மனைவியைக் கைவிட்டு—பொருள் தேடும்பொருட்டுச் செல்பவனே, நீ வலிமையுள்ள மனத்தையுடையவனா யிருக்கின்றாய். தேட வேண்டிய பொருளைத் தேடி. முடித்த மிகுதியாலே உண்டாகும் பயனே இவ் வின்பவாழ்க்கை என்று சொல்பவனே, இளமையும், காம இன்பமும் நின் கைக்கு அடங்கி நில்லா. அன்றியும், இறக்கும் நாள் இது என்று உலகத்தில் அறிந்தவர்களும் இல்லை.(ஆதலால் நீ) முலைகளின் இடையில் மலர் மாலை குழையும்படி புணரும் முறைமையினையுடைய நாட்கள் இளமைப் பருவத்தே கழிவடையாமல் பார்த்துக்கொள். காமதர்மம் குற்றமுற அதனோடு பகை கொண்டு பொருளின்பொருட்டுச் செல்வோனே, பெரியோனே, நீ, தமக்கு வரும் இறப்பையும், கிழத்தனத்தையும் மறந்திருக்கின்ற அறிவில்லாதாரோடு ஒரே விதமாக மாறுபட்ட பெரியோர் நிற்கின்ற வழியினைக்கைக்கொண்டு நடப்பாயாக.

தாகம் என்பதுதாம் என நின்றது. வேறுக - வேறுகி என்னும் எச்சத்தின் திரிபு.

பதுக்கை - கற்குவை. புறநானூறு 3-ஆம் பாட்டின் 21-வது வரியின் உரையை நோக்குக.

---

### பாலைக் கலி 12.

தலைவனால் பிரிவு உணர்த்தப்பட்ட தலைவி தானும் அவனுடன் செல்ல விரும்பினாள். அதற்கு அவன் காட்டினது கடுமையையும் அவளது மென்மையையும் எடுத்துக் கூறி இணங்கா னாயினான். ஆதலின், ஆற்றாளாய தலைவிக்குத் தோழி, "நங்காய், அவர் நம்மொடு நகையாடிச் சொன்னார்; பிரிவாரல்லர்" என வற்புறுத்திக் கூறியதைக் கூறுவது இச்செய்யுள்.

செருமிகு சினவேந்தன் சிவந்திறுத்த புலம்போல
வெரிமேய்ந்த கரிவறல் வாய்புகுவ காணுவாய்ப்
பொரிமலர்ந் தன்ன பொறிய மடமான்
றிரிமருப் பேறொடு தேரறற் கோட
மரல்சாய மலைவெம்ப மந்தி யுயங்க
வுரல்போ லடிய வுடம்புயங் கியானை
யூறுநீ ரடங்கலி னுண்கயங் காணாது
சேறு சுவைத்துத்தஞ் செல்லுயிர் தாங்கும்
புயறுளி மாறிய போக்கரு வெஞ்சுரம்

எல்வளை யெம்மொடு நீவரின் யாழநின்
மெல்லியன் மேவந்த சீறடித் தாமரை
யல்லிசே ராயிதழ் அரக்குத்தோய்ந் தவைபோலக்
கல்லுறி னவ்வடி கறக்குந வல்லவோ?

நலம்பெறு சுடர்நுதா லெம்மொடு நீவரி
னிலங்குமா ணவிர்தூவி யன்னமென் சேக்கையுட்
டுலங்குமான் மேலூர்தித் துயிலேற்பாய் மற்றுண்டை
விலங்குமான் குரல்கேட்பின் வெருவுவை யல்லையோ?

கிளிபுரை கிளவியா யெம்மொடு நீவரிற்
றளிபொழி தளிரன்ன வெழின்மேனி கவின்வாட
முளியரில் பொத்திய முழங்கழ லிடைபோழ்ந்த
வளியுறி னவ்வெழில் வாடுவை யல்லையோ?

எனவாங்கு,

அனையவை காதலர் கூறலின் வினைவயிற்
பிரிகுவ ரெனப்பெரி தழியாதி திரிபுநீ இக்

*கொடுங்குழாய் துறக்குந ரல்லர்*
*நடுங்குதல் காண்மார் நகைகுறித் தனரே.*
*கடுங்குரை யருமைய காடெனி னல்லது*

(வரி 1—9) செரு - போரில், மிகு சின வேந்தன் - மிகுகின்ற கோபத்தையுடைய அரசன், சிவந்து இறுத்த - கோபித்து வந்து தங்கிய, புலம்போல - (பகைவர்) நிலத்தை (நெருப்புத் தின்றாற்) போல, எரி மேய்ந்த கரி - நெருப்பானது தின்ற கரியினையுடைய, வறல்-பாலைநிலத்திடத்தனவாகிய, பொரி மலர்ந்தன்ன-பொரி மலர்ந்தாற் போன்ற, பொறிய மடமான் - புள்ளிகளையுடைய மடப்பத்தையுடைய மான்கள், வாய் புகுவ காணாவாய் - உணவுகளைக் காணாவாய், திரி மருப்பு எருவொடு - திரிந்த கொம்புகளையுடைய ஆண் மான்களோடு, தேர் அறற்கு ஓட - பேய்த்தேராகிய கானல் நீர்க்கு ஓட, மரல் சாய - மருள் என்னும் கற்றாழை வாடும்படி, மலைவெம்ப-மலைகள் கொதிக்க, மந்தி உயங்க - பெண்குரங்குகள் வருந்த, உரல் போல் அடிய - உரல் போன்ற அடிகளையுடையனவாகிய, உடம்பு உயங்கு யானை - உடம்பு வருந்திய யானைகள், ஊறுநீர் அடங்கலின் - ஊறும் நீர் ஊறாமையால், உண்கயம் காணாது - நீர் உண்டற்கு வேறு நீர்நிலை காணாமல், சேறு சுவைத்து - சேற்றின் ஈரத்தை உண்டு, தம் செல் உயிர் தாங்கும் - தமது போகின்ற உயிரைக் காக்கும், புயல் துளி மாறிய - மேகம் துளித்தலைத் தவிர்ந்த, போக்கு அரு வெஞ்சுரம் - போதற்கரிய கொடிய காட்டில்

ஓட, வெம்ப, உயங்க என்னும் வினையெச்சங்கள் மாறிய என்னும்பெயரெச்சத்தைக்கொண்டுமுடிகின்றன.

எருவொடு - இரட்டாமல் வந்தது (நன் - சூ. 183.)

(தாழிசை)

(வரி. 10 - 13) எல் வளை - ஒளியினையுடைய வளையினை உடையவளே, எம்மொடு நீ வரின் - நீ எம்மோடு வருவாயானால், நின் - உனது மெல்லியல்-மெல்லிய தன்மை, மேவந்த - பொருந்திய, சீறடி தாமரை - சிறிய அடித்தாமரைகள், கல் உறின் - கற்களைத் தீண்டுமானால், அவ்வடி - அவ்வடிகள், அல்லி சேர் - அக இதழ்களாகப் பொருந்திய, ஆய் இதழ் - அழகிய இதழ்கள், அரக்கு தோய்ந்தவைபோல - சாதிலிங்கக் குழம்பிலே தோய்ந்த போது தோன்றுமாறுபோல, கறுக்குந அல்லவோ-கறுப்பன அல்லவோ?

யாழ - அசை

(வரி. 14-17) நலம்பெறு - அழகுபெற்ற, சுடர்நுதால்-ஒளியினையுடைய நெற்றியை உடையவளே, எம்மொடு நீ வரின் - எம்மோடு நீ வருவாயானால், துலங்கு - விளங்குகின்ற, மான்மேல் - (மரத்தாற் செய்த பொய்ச் சிங்கக் கால்மேல் (எற்றிய), ஊர்தி - கட்டிலில், இலங்கு மாண் அவிர் - ஒளிவிடும் மாட்சிமை விளங்கும், அன்ன தூவி மென் சேக்கையுள் - அன்னத் தூவியாற் செய்த மெல்லிய படுக்கையில், துயில் எற்பாய் - உறக்கத்தைக் கொள்ளுகின்ற நீ, ஆண்டு - அக்காட்டில், விலங்கு மான் குரல் கேட்பின் - மிருகமாகிய (உண்மைச்) சிங்கத்தின் குரலைக் கேட்டால், வெருவுவை அல்லையோ - அஞ்சுவை அல்லையோ ?

மற்று - வினைமாற்றுப் பொருளில் வந்த இடைச்சொல்.

(வரி. 18 - 21) கிளிபுரை கிளவியாய் - கிளிமொழியையொக்கும் மொழியினையுடையாய், எம்மொடு நீ வரின் - எம்மோடு நீ வருவாயானால், தளிபொழி - மழைத்துளி வீழ்ந்த, தளிர் அன்ன - தளிரைப் போன்ற, எழில் மேனி-அழகிய (உனது) நிறம், கவின் வாட - அழகு கெடும்படி, முளி அரில் - உலர்ந்த சிறு செடிகளை, பொத்திய முழங்கு அழல் இடை - கவிந்துகொண்ட ஒலிக்கின்ற நெருப்பினூடே, போழ்ந்த - புகுந்து வந்த, வளி உறின் - (வெப்பமான) காற்றானது படுமானால், அவ்வெழில் - அவ்வழகு, வாடுவை அல்லையோ கெடுவாய் அல்லையோ ?

(தனிச்சொல்)

என - என்று. ஆங்கு - அசை

(சுரிதகம்)

(வரி - 23 - 27) அனையவை - அத்தன்மையவற்றை, காதலர் கூறலின் - காதலர் கூறுவதால், வினை வயின் பிரிகுவர் என-போரின் பொருட்டுப் பிரிவர் என்று, திரிபு உறீஇ பெரிது அழியாதி - மனம் திரிந்து அதிகம் அழியாதே, கொடுங்குழாய் - வளைந்த மகரக் குழையை உடையவளே, காடு கடுமை அருமைய எனின் - காடுகள் மிகவும் (செல்லுதற்கு) அருமையவென்று சொல்லுவாராயின், நடுங்குதல் காண்மார் - நினது மெய்ந்நடுக்கத்தைக் காண்டற்கு, நகைகுறித்தனரே அல்லது - ஒரு விளையாட்டைக் குறித்துக் கூறினரே அல்லாமல், துறக்குநர் அல்லர் - (அவர் நம்மை விட்டு) நீங்குபவர் அல்லர்.

குரை - அசை.


ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள் :

| | |
|---|---|
| பாதாமி லேகியம் | ரூ. 3-0-0 |
| ரதிவல்லப லேகியம் | 2-0-0 |
| மஹா திராக்ஷாதி லேகியம் | 2-0-0 |

குழந்தைகளுக்கு

| | |
|---|---|
| ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை | 0-4-0 |
| பால சஞ்சீவினி | 0-4-0 |
| பால ஸுதா (டானிக்) | 1-0-0 |



தைலங்கள் :

| | | |
|---|---|---|
| சந்தனாதி | 6 அவுன்ஸ் | ரூ. 1-0-0 |
| அமிர்தாமலக | ,, | 0-12-0 |
| பிருங்காமலக | ,, | 0-12-0 |

ஸ்திரீகளுக்கு

| | |
|---|---|
| ஸுதக டானிக் | 2-0-0 |
| கர்ப்பாசய டானிக் | 2-0-0 |
| ப்ரஸவ லேகியம் | 1-8-0 |

சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.

I.D.L. ச்யாவனப்ராச I.D.L. பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை

நஞ்சன்கூடு பல்பொடி

சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) I.D.L. 61, மெடிகேடட்-டப்பி

தயவுசெய்து கவனித்து வாங்கவும்.

I.D.L. ச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு

மூலிகைசேர்ந்தசிற்றமணக்கு எண்ணை. காஸ்ட்ரால்கஸ், 2 அவுன்ஸ் 0-3-0 6 அவுன்ஸ் 0-8-0

ஜ்வரேக் போல் எவ்வித ஜ்வரங்களுக்கும் சரியான யுனைடெட் கன்ஸன், பத்ர்தேகுங்யும்

[பஸ்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]





## கலாநிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

**தலையங்கங்கள்:**— அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச் சோதனை 8. விஷபத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயலவேண்டா. விளம்பினல் வெட்கக்கேடு. கல்லாதபேர்களே நல்லவர்கள் 3. நாணத்தால் நைவார் திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன

**கம்பராமாயணம்:**—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேத வியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்த, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

**குறுந்தொகை:**—(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச் சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

**அப்பர்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

**இலஞ்சிப்பாவை:**—(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

**மானத சாத்திரம்:**—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவுநாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இளைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

**தமிழ்ப் பாடம்:**—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

**நம்மாழ்வார் வைபவம்:**—(K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

## 1931-வது வருடம் 4-வது வால்யூம்.

**தலையங்கம்:**— அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4 மறப்பது முறுதியாமே. கள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

**கம்பராமாயணம்:**—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

**சூளாமணி:**—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை பெறுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

**யாப்பிலக்கணம்:**—உறுப்பியலும், செய்யுளியலில பாக்களின் இலக்கணமும்.

**அப்பர்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

**ஆண்டாள்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அநுபவம், பௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை

**மானத சாத்திரம்:**—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

**பிலாரோ நாடகம்:**— ஆங்கிலப்புலவர் R.B. Sheridan எழுதிய நாடகமொழிபெயர்ப்பு.

**நவராத்திரி நாடகம்:**—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

**சிதம்பரதேவர் சரிதம்:**—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் காவல்.

**களவியற் காரிகை:**—(S. வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொருளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

**கந்தபுராணமும் சங்க நூல்களும்:**—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. 7 8 0
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. 8 8 0 ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. 9 0 0

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். எழெட்டெணுக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னாப்ரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

எமது புதிய பிரசுரங்கள்

**சோவியத் ருஷியா.**

இது பண்டிதர் ஜவஹரிலால் அவர்கள் எழுதிய ஆங்கில நூலின் தமிழ்மொழி பெயர்ப்பு. ஏழை, பணக்காரன், ஆள்பவன், ஆளப்படுபவன், ஆண் பெண் என்னும் ஏற்றத்தாழ் வில்லாதபடி, குடிவாழ்க்கை ருஷியாவில் அமைக்கப்பெற்றுளதெனக் கூறப்படும் தற்கால ருஷியசரித்திரமாகும் இது. விலை ரூ. 1-4-0. தபால் செலவு வேறு.

**இராட்டூர் வீரன் துர்க்காதாஸ்.**

வங்காளக் கவி பாபு துவிஜேந்திரலால் எழுதிய நாடகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு. இராஜபுத்திரர் வீரத்தையும், அவர்களது இராஜ விசுவாசத்தையும் இந் நாடகம் புலனுக்குகின்றது. விலை ரூ. 1-4-0. தபால் செலவு வேறு.

**சுப்பிரமணிய பாரதியார்.**

தமிழ் நாட்டின் தேசியக் கவி என்று கொண்டாடப் பெறும் ஸ்ரீமான் பாரதியாரின் நூல் ஆராய்ச்சியாகும் இது. விலை ரூ. 1-0-0. தபால் செலவு வேறு.

கிடைக்குமிடம்:—

பாரதி புத்தகாலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

திரு அருட்பா
பி. ஏ., எம். எல்., அட்வொகேட்,
**ஆ. பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பு**
ஒன்றே
சுவாமிகள் கை எழுத்தைக்கொண்டு அச்சிட்டது!

ஆகையால், பிழை முதலிய விபரீதங்கள் இல்லாததும் நூதன விஷயங்கள் எல்லாம் கொண்டதும் இப்பதிப்பே!!

ஏற்ற பெற்றி பாகுபாடு செய்யப்பட்டு, அரிய ஆராய்ச்சிக் குறிப்புக்களோடு விளங்கும் இப் பதிப்பின் பகுதிகள் அடக்க விலையில் கிடைக்கும்!!!

6-வது தனிப் பாசுரப் பகுதி
(பல மத ஸ்தோத்திரங்கள்-தபால் செலவோடு 6 அணா அனுப்புதல் வேண்டும்.)

ANCIENT JAFFNA
**Mudaliar C. Rasanayagam** C. C. S.
An anthentic history of Jaffna based on archeological, Epigraphic and Linguistic researches.
**Rs. 5 8 0 Postage extra.**
KALANILAYAM
**Vellala Street, Purasawalkam, Madras.**

சென்னைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர் திருவாளர் S. வையாபுரிப் பிள்ளையவர்களால்

## — பதிப்பிக்கப்பெற்ற நூல்கள் —

தமிழகராதி ஆதார நூற்றெகுதி
**நாம தீப நிகண்டு.**

நிகண்டுகளின் வரலாறு, ஆசிரியரது காலம், நூலின் நயங்கள், முதலியன அடங்கிய சிறந்த முன்னுரை கொண்டது. பொருட் பெயர்களை விளங்கக் கூறும் செவ்விய உரைபாடமுள்ளது. நூலின்கண் வந்துள்ள பொருட்பெயர்களனைத்தையும் முற்ற வுணர்த்தும் அனுபந்தம் பெற்றது. சுமார் 12000 சொற்கள் கொண்ட சிற்றகராதியாக உதவுந் தகையது.

விலை ரூபா **2-0-0**

**அரும்பொருள் விளக்க நிகண்டு.**

சிறந்த ஒரு சொற் பல்பொருள் நிகண்டு. நிகண்டுகளின் வரலாற்றினை விளக்கும் விரிந்த முன்னுரையுடன் கூடியது. சொல்லின் பொருள்களை யெளிதாகத் தெரிந்துகொள்ளுதற்குப் பலபொருளொருசொல் லகராதி சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூபா **1-4-0**

**கம்பராமாயணம்—உயுத்தகாண்டம்.**

முதல் மூன்று படலங்கள்: பல ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கித் திருத்தியது; பாடபேதங்களனைத்துங் கொடுக்கப் பெற்றது. விலை ருபா **0-6-0**

**திருக்குறள்**
மூலமும் சொற்குறிப் பகராதியும் விஷய ஒப்புக்குறளும்
(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணுக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று. விலை அணு **0-12-0**

**களவியற் காரிகை.**

ஒரு சிறந்த அகப்பொரு ளிலக்கண நூல்; முதன் முறை இப்போதுதான் அச்சில் வெளிவந்தது. கிடைத்தற்கரிய பல அரிய நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற மேற்கோள்களை யுடையது; பல அனுபந்தங்களை யுடையது. தமிழாராய்ச்சியாளர்க்குப் பெரிதும்பயன்படுவது. க்ரௌன் அளவில் 170 பக்கங் கொண்டது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா **3-0-0**

**நூற்பொருட் குறிப்பு.**

1. இறையனார் களவியலுரை; 2. குறுந்தொகை; 3. திருக்கோவையார்; 4. நற்றிணை; 5. களவழி நாற்பது; 6. தேவாரம்; 7. வீரசோழியம்; 8. நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலிய எட்டு நூல்களின் பொருட் குறிப்பு அடங்கியது. தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப் பண்டிதர் ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்களால் தொகுக்கப்பட்டது. டெம்மியளவில் 175-பக்கங்கள் உடையது. இலக்கிய ஆராய்ச்சிக்கும் சரித்திர ஆராய்ச்சிக்கும் மிக இன்றியமையாதது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா **10-0-0**

**இராஜசுந்தரம்.**

ஒரு நவீனகம். இனிய எளிய நடையில் எழுதப் பெற்றது. விலை ரூபா **0-8-0**

**தினகரமாலை யென்னும்-தினகர வெண்பா**

திருக்குறளின் அதிகாரத்திற் கொரு வெண்பாவாக 133 வெண்பாக்களைக் கொண்டது. இது ஒரு பண்டை நூல். இதைப் பதிப்பித்தவர் ஸ்ரீமான் S. வையாபுரி பிள்ளை, B.A., B.L.,
விலை அணு **0-6-0**

**கலா நிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசை, சென்னை.**



## வர்த்தமானம்

படக் காட்சியில் புதிய முறை:—இதுவரையில் சினிமாப் படக்காட்சியில் திரைகளில்விழும் நிழலே காட்சியாகக் காட்டப்பெற்றது. அமெரிக்காவில் ஓர் ஆராய்ச்சியாளர் நடிகர்களின் உருவங்கள் நேரே பதுமைகளாகத் தோன்றும்படியான ஒரு முறையைக் கண்டுபிடித்திருக்கின்றார் என்று தெரிகின்றது. சென்ற பத்து ஆண்டுகளாக அவ்வாராய்ச்சியாளர் இம் முயற்சியில் ஈடுபட்டிருந்தாராம். இம்முறையைக் கண்டுபிடிக்க அவருக்கு 50 ஆயிரம் பொன் செலவாயிற்றாம். இன்னும் சில காலத்தில் இப் புதுமுறை எங்கும் கையாளப்பெறும் என்று கூறுகின்றார்.

***

செயற்கைச் சூரியன்:—அமெரிக்கா ஐக்கிய நாட்டில் சிக்காக்கோ என்னும் நகரத்தில் பால்மாலிவ் சோப் கம்பெனியாரின் கட்டிடம் ஒன்றிருக்கின்றது. அது 39 அடுக்கு மெத்தைகளைக் கொண்ட கட்டிடம். அக்கட்டிடத்தின் உயரம் 602 அடி என்று தெரிகின்றது. அதன் உச்சியில் ஒரு மண்டபத்தின் மேல் 200 கோடி மெழுகுவர்த்திகளின் பிரகாசமுடைய ஒரு மின்சாரவிளக்கு அமைக்கப்பெற்றிருக்கின்றதாம். ஆகாயத்தில் 250 மைல் சுற்றளவு வெளிச்சத்தைத் தருகின்றதாம். இரவிலே செல்லும் விமானிகளுக்கும் இவ்விளக்கு மிகவும் உதவியாயிருக்கின்றதாம். இதை அமெரிக்காவில் மனிதச் சூரியன் என்று அழைக்கின்றனராம். இச்செயற்கைச்சூரியன் சுற்றிக்கொண்டே இருக்கின்றதாம். அதற்கு அடியில் 1 கோடியே 15 லட்சம் மெழுகுவர்த்திகளின் பிரகாசத்தைக் கொண்ட வேறு ஒரு விளக்கும் வைக்கப்பெற்றிருக்கின்றதாம். இது சுற்றுமல் நிலையாயிருக்கின்றதாம்.

***

காதலன் வெற்றி:—ஹங்கேரி நாட்டில் புடாபெஸ்டு என்னும் நகரில் ஒரு அழகிய பெண்ணிருந்தாள். அவள் ஒரு தனவந்தருடைய பெண். அவளை மணக்க ஆண்ட்ரூஸ் குளோப் என்பவன் விரும்பினான். அவன் ஏழையானபடியால் அப்பெண் மறுத்துவிட்டாள். உடனே அவளைக் கொன்றுவிட அவன் முயன்றான். போலீசார் அவனைக் கைதுசெய்து அவனுக்கு மூன்றுவருடக் காவல்தண்டனை விதித்தனர். சிறைவாஸம் முடிந்து அவன் வெளிவந்ததும் அப்பெண்ணைத் தேடிச் சென்றான். அவள் ஒரு தனவந்தனை மணந்துகொண்டிருப்பது கண்டு மனம் பொறாமல் அவளுடைய வீட்டிற்குத் தீ வைத்தான். இந்தக் குற்றத்திற்காக மீண்டும் இரண்டுவருடம் சிறை சென்றான். மீண்டும் சிறையிலிருந்து வெளிவந்ததும் அப்பெண்ணைத் தேடிச் சென்றான். அவள் அப்பொழுது விதவையா யிருந்தாள். அது கண்டு தன்னை மணந்துகொள்ளும்படி அவளை வேண்ட அவளும் மனமிரங்கிச் சம்மதித்தாள். அவ்விருவருக்கும் சமீபத்தில் மணம்நடந்தது என்று அயல் நாட்டுச் செய்தி கூறுகின்றது.

***

அற்புதவைத்தியம்:—ஹங்கேரி நாட்டு வைத்திய நிபுணர் ஒருவர் ஒரு நோயாளியின் ஹிருதயத்தை வெளியே எடுத்து இரணச்சிகிச்சை செய்து, பிறகு ஹிருதய ஸ்தானத்தில் அதை வைத்துத் தைத்துவிட்டாராம். நோயாளியும் குணமடைந்தானும். இது கண்டு ஐரோப்பா முழுதும் வியக்கின்றதாம்.

பால்மரம்:—தென் அமெரிக்காவில் வெறுசிலா என்னும் ஊரில் பால்மரம் என்னும் ஒருவகை மரம் இருக்கின்றதாம். இம்மரத்தினின்று வருகின்ற சாறு பசுவின் பால்போன்று இருக்கின்றதாம். பசுவின் பாலிலுள்ள வஸ்துக்களெல்லாம் இச்சாற்றிலும் இருக்கின்றன வென இரசாயன சாஸ்திரிகள் கண்டுபிடித்திருக்கின்றனர். ஆனால் அச்சாற்றில் சாம்பிராணியின் வாசனை சிறிது இருக்கின்றதாம். அச்சாற்றைக் காய்ச்சி மோர் ஊற்றி வைத்துக்கொண்டால் வெண்ணெய் அகப்படுகிறதாம். அம்மரம் 100 அடி முதல் 125 அடி வரையில் உயர்ந்து வளர்கின்றதாம்.

***

மின்சாரப் பசு:—அடுத்த வருடம் ஆரம்பமாகும் சிக்காகோ கண்காட்சிச்சாலையில் வைப்பதற்கென்று ஒரு மின்சாரப் பசு செய்யப்பெற்றிருக்கின்றதாம். அது உயிருடைய பசுவைப் போல் இருக்குமாம். உயிருள்ள பசுப்போல் மூச்சுவிடுகின்றதாம். ஆகாரத்தை உட்கொள்கின்றதாம். ஆகாரம் எடுத்த பிறகு அதன் மடி சுரந்து பால்தாரை கீழே வைக்கப்பெற்றிருக்கும் பாத்திரத்தில் விழுகின்றதாம். அது பசுவின் பால்போலவே யிருக்கின்றதாம். இப் பசுவின் விலை 3000 டாலர் என்று தெரிகின்றது.

***

நூதன மூலிகை:—அமெரிக்கத் தீவுகள் ஒன்றில் வசிக்கும் நீக்ரோ ஒருவன் கப நோயாலும் வயிற்று வலியாலும் பல ஆண்டுகள் வருந்தினும். அவன் தின்ற ஆங்கில மருந்துகளும் நாட்டு மருந்துகளும் பயனற்றுப் போகவே, ஒரு வயோதிகர் கூறியபடி ரொயினு என்னும் ஒரு மூலிகையை உண்டானும். அதைச் சாப்பிட்டதும் 5 நாள் வரை தன்னினைவு இல்லாமல் கிடந்து 6வது நாள் கண் விழிக்க, கண் தெரியாமல் போயிற்றும். இப்படி 6 மாதகாலங்கழிய அவன் திரும்பவும் கண் பார்வையைப் பெற்றதுமல்லாமல், நோயும் நீங்கியுவனுனன். அவனது கறுப்பு நிறமும் அகல வெள்ளைக்காரர் தேகம்போல் வெண்ணிற முடையவனுனன். இவ்விஷயத்தை யறிந்த அத்தீவின் சுகாதார அதிகாரி அம்மூலிகையை ஆய்ந்து வருகின்றாராம். அவ்வாராய்ச்சி திருப்திகரமாய் முடியுமாயின் இனி உலகத்தில் கறுப்பு மனிதர்களே இல்லாமல் செய்துவிடலாம் என்று கருதப்படுகின்றது.

***

இலவசப் படகு:—இராமேச்வரத்திற்கும் தனுஷ்கோடிக்கும் இடையில் இருக்கும் நீர்ப் பரப்பை யாத்ரிகர்கள் கடப்பதற்காக, இராமனுதபுரம் ராஜா இலவசப் படகுகளை வைத்திருக்கின்றார். இராமேச்வர யாத்திரை செய்பவர்களுக்கு இது மிகவும் வசதியளிக்கும்.

***

செட்டி நாட்டு மஹாநாடு:—ஜூன் மாதம் 13, 14, தேதிகளில் செட்டி நாட்டில், சைகோனிலுள்ள செட்டியார்களின் நிலையைப்பற்றி யோசிக்க, செட்டி நாட்டு ராஜா ஸர். அண்ணாமலைச் செட்டியார் மாளிகையில் ஒரு மஹாநாடு நடைபெற்றது. ராஜா ஸர். அண்ணாமலை செட்டியாரவர்கள் அம்மஹாநாட்டில் தலைமைவகித்தார். சைகோன் பிரஞ்சு அரசாங்கத்தார் செட்டியார்களிடத்தில் செலுத்தும் தேசப் பிரஷ்ட உத்திரவையும், லேவாதேவி விஷயமான சட்டங்களையும், இம்மஹாநாடு கண்டித்துத் தீர்மானம் செய்து, அதை இந்தியா கவர்ன்மெண்டிற்கும், பிரிட்டிஷ் அரசாங் கத்திற்கும் அனுப்பியது.

**அறிக்கை:—கலா நிலயத்தில் மதிப்புரை வரைவதற்குப் புத்தகமும் அனுப்புவார் ரூ. 10 கட்டணம் செலுத்த வேண்டும். அப்பொழுதே புத்தகத்தின் குணங்களையும் குற்றங்களையும் ஆய்ந்து எழுதுவோம். இல்லையேல் புத்தகத்தின் வரவுமாத்திரம் குறிக்கப்படும்.**

KALANILAYAM
Reg. No. M. 2324.


# — கம்ப ராமாயணம் —

பதவுரை விரிவுரை விளக்கம் இலக்கணக் குறிப்பு முதலியவைகளுடன்

வை. மு. சடகோப ராமாநுஜாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார்.

ஆகியவர்களால் பதிப்பிக்கப் பெற்றவை.

| | | | | |
|---|---|---|---|---|
| பால காண்டம் ... ... ... ... | ரூ. | 5 | 0 | 0 |
| அயோத்தியா காண்டம் ... ... ... ... | ,, | 5 | 0 | 0 |
| ஆரணிய காண்டம் ... ... ... ... | ,, | 4 | 0 | 0 |
| கிட்கிந்தா காண்டம் ... ... ... ... | ,, | 4 | 8 | 0 |
| சுந்தர காண்டம் ... ... ... ... | ,, | 5 | 0 | 0 |
| யுத்த காண்டம்—2 பாகம் ... ... ... ... | ,, | 10 | 0 | 0 |

தபால், அல்லது இரயில் பார்ஸல் கட்டணங்கள் வேறு. வேண்டுவோர், தாம் வேண்டும் புத்தகங்களுக்குரிய விலையில் பாதியாவது முன்பணம் அனுப்பி ஆர்டர் செய்யவேண்டும். மற்றதை வி. பி. மூலம் பெற்றுக்கொள்வோம்.

மானேஜர் :— **கலா நிலயம், வேளாளர் வீதி, புரசை, சென்னை.**



தேகபலம், ஞாபகசக்தி, உற்சாகம், ஊக்கம், சுக சம்பத்து இவைகளைக் கொடுப்பதில் எங்கள் பிரசித்திபெற்ற

**ஆதங்க நிக்ரஹ மாத்ரைகள்**

பலவிருத்தி ஔஷதங்களுக்கெல்லாம் முன்னணியில் நிற்கின்றன. இலட்சக் கணக்கான ஜனங்கள் (சென்ற 53 வருஷங்களாக) உபயோகித்து குணமென்னும் பாக்கியத்தை அடைந்திருக்கிறார்கள். நீங்களும் ஒரு டப்பியை உபயோகித்துக் குணத்தை அறியுங்கள்.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1 0 0
5 டப்பிகள் ரூ. 4 0 0

இனும்! ஆரோக்கிய கிரந்தம் இனும்!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.



**ஆறெழுத்தந்தாதி**:—அகத்திய முனிவர் அருளிச் செய்த இவ் வாறெழுத்தந்தாதி முருகக் கடவுளை முழுமுதற் கடவுளாக உபாசனை செய்வதற்குரியதாய் ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தைத் தன்னுள் அடக்கியதென்று கருதப்படுகின்ற 100 செய்யுள்களைக் கொண்ட நூல். இது டாக்டர் V. S. அருணசலம் பிள்ளை யவர்களின் உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை அணா 12. தபால் செலவு வேறு.

---

**பெருமாள் திருமொழி**:—(குலசேகராழ்வார் திருவாய் மலர்ந்தது.) ஸ்ரீமான் பு. ப. இரத்தின சபாபதி நாயகர் அவர்கள் இயற்றிய பதவுரை, இலக்கணக் குறிப்பு சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்தது. நாலாயிரப் பிரபந்தம் பயில விரும்புவோர்க்கு இது மிகுந்த உதவி தரும். விலை:-கலிகோ 1-4-0, சாதா 1-0-0. தபால் செலவு வேறு.

கலா நிலயம்
வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.



**NATIONAL INSURANCE COMPANY, LIMITED.**
**Head Office:**
**NATIONAL INSURANCE BUILDING,**
**7, Council House Street, Calcutta.**

New Business Completed During 1932 ... ... Rs. 1,55,66,720
Out of a business of ... Rs. 1,96,70,000 received in proposals.

Life Assurance is security—
- for the policyholder from an investment point of view.
- for the policyholder and after him for his wife and children.

Claims paid over ... Rs. 1,00,00,000
Total Assets exceed ... Rs. 1,90,00,000

For Terms & Conditions apply to:—

T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers*.

**FIRE & ACCIDENT RISKS**
**covered by**
**NATIONAL FIRE**
AND
**GENERAL INSURANCE COMPANY Ltd.,**
**NATIONAL INSURANCE BUILDING,**
**7, Council House Street, Calcutta**

For Terms & Conditions apply to:—

T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers*.


Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)